

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## தை - மாசி

மலர் 11 பிப்ரவரி - 2022 இதழ் 2

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 13 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| யோகவாஸிஷ்டத்தில் பகவத்கீதை | 16 |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 1 | 20 |
| ப்ரபோத சிந்தமாணி | 23 |
| பாணாழ்வார் கண்ட பாதாதிகேசம் | 25 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 32 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 37 |
| புராணக்கதை | 39 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியருளிய உபகதைகள் | 41 |
| மகாபாரத சுருக்கம் | 43 |
| மாசி மாத விசேஷ தினங்கள் | 45 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 46 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

**काश्याम् निपातय वपु; श्वपचालये वा स्वर्गम् नय त्वमपवर्गमधोगतिम् वा**
**अध्यैव वा कुरु दयाम् पुनरायतौ वा क: सन्भ्रमो मम धने धनिन : प्रमाणम् ।**

காஸ்யாம் நிபாதய வபு; ஸ்வபசாலயே வா ஸ்வர்கம் நய ட்வமபவர்காமதொகதிம் வா
அத்யைவ வா குரு தயாம் புனராயதௌ வா க: ஸம்ப்ரமோ மம தனே தனின:ப்ரமானம்

*ஹே தேவி! என்னை காசியில் சண்டாளனுடைய வீட்டில் தள்ளு, ஸ்வர்கத்தில் சேர் அல்லது பாதாளத்தில் தள்ளு, இப்போதே தயை செய் அல்லது பின்பு செய். இதிலென்ன கலக்கம் எனக்கு? தனத்தின் மீது தனிகனுக்குத்தான் அதிகாரம்.*
*(தேவிக்கே முழு உரிமை என்பது தாத்பர்யம்)*

**त्वत्सन्निधान रहितो मम मास्तु देश; त्वत्तत्वबोध रहितो मम् सास्तु विध्या ।**
**त्वत्पादबक्तिरहितो मम मास्तु वम्शः त्वत्चिन्तया विरहितम् मम मास्तु चायुः ।।**

த்வத் ஸன்னிதானரஹிதோ மம மாஸ்து தேஸ: த்வத்தத்வபோத ரஹிதோ மம மாஸ்து வித்யா
த்வத்பாத பக்தி ரஹிதோ மம மாஸ்து வம்ஸ: த்வத்சிந்தயா விரஹிதம் மம மாஸ்து ஆயு:

*தேவி உன் ஸன்னிதானமில்லாத இடத்தில் எனக்கு தேசம் வேண்டாம். உன் தத்வ போதம் இல்லாத கல்வி வேண்டேன், உன்னிடத்தில் பக்தி இல்லாதவர்களின் வம்சவழி வேண்டேன், உன் சிந்தனை இல்லாத ஆயுள் வேண்டேன்.*

**त्वम् देवि याध्रुगसि ताध्रुगसि त्वमीध्रुगेवेति वक्तुमिह बोध्धुमपि क्षम; क**
**मामोव तावदविदन्नति पामरोहम् मतः स्तुतिम् त्वयि समर्पयितुम् विलज्जे ।**

த்வம் தேவி யத்ருகஸி தாத்ருகஸி த்வமீத்ருகேவ இதி வக்துமிஹ போத்துமபி க்ஷம:க:
மாமேவ தாவதவிதன்னதி அதி பாமரோஹம் மாத:ஸ்துதிம் த்வயி ஸமர்பயிதும் விலஜ்ஜே.

*தேவி நீ நீயாகத்தான் உள்ளாய். நீ இப்படி அப்படி என்று யாரால் கூற முடியும் நான் என்னையே அறியாத பாமரனாயிருக்க இந்த துதிகளை உனக்கு ஸமர்ப்பிக்க வெட்கப்படுகிறேன். (நீலகண்ட தீக்ஷிதரின் ஆனந்த ஸாகரஸ்தவம்)*

*நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை*
*என்றும் வணங்குவது நின் மலர்த்தாள் எழுதா மறையின்*
*ஒன்றும் அருளும் பொருளே அருளே உமையே இமயத்து*
*அன்றும் பிறந்தவளை அறியா முக்தி ஆனந்தமே (10)*

*பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி உன்றன்*
*இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவன்*
*மதத்தே மதி மயங்கேன் அவர்போன வழியும் செல்லேன்.*
*முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே. (92)*

*விரும்பித்தொழும் அடியார் விழி நீர் மல்கி,மெய்புளகம்*
*அரும்பித் ததும்பிய ஆனந்தம் ஆகி அறிவு இழந்து*
*கரும்பிற் களித்து மொழி தடுமாறி முன் சொன்னவெல்லாம்*
*தரும்பித்தவர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே. ( 94)*

*அணங்கே அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்*
*வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன், நெஞ்சில் வஞ்சகரோடு*
*இணங்கேன் எனது உனதென்றிருப்பார் சிலர் யாவரொடும்*
*பிணங்கேன் அறிவொன்றிலேன், என் கண் வைத்த பேரளியே (81)*

அபிராமி அந்தாதி

# ஆசிரியர் பக்கம்

அண்மையில் ஒரு Graph வரைபடம் பார்க்க நேர்ந்தது. அதில் நம் நாட்டின் Life expectancy அதாவது மனிதனின் வாழ்வு காலம் எத்தனை வயது வரை என்று போட்டிருந்தது. அதன் விவரம் 1940-ல் 20 ஆகவும் 1970-ல் 40 ஆகவும் படிப்படியாக முன்னேறி தற்போது 69 என்பதாகும். விளக்கமாகச் சொன்னால் 1940-ல் அல்ப ஆயுசாக இருந்தது. தற்போது தீர்காயுசாக உள்ளது மிக்க த்ருப்தியாக இருந்தது. இதற்குக் காரணம் நமது மருத்துவ சாதனைகள் - தடுக்க வேண்டிய நோய்களைத் தடுத்தல், நோய் வந்த பின் தகுந்த சிகிச்சை அளித்தல் இப்படி பல. உண்மையில் நம் மருத்துவ சாதனைகளைப் பற்றி பெருமை கொள்ளலாம். ஐயமில்லை. ஆனால் இந்த வாழ்வு பயனளிப்பதாக உள்ளதா? சற்று ஆராய்வோம்.

எண்பத்தி நாலு லக்ஷம் யோனிகள் பிறப்பில் மனிதப் பிறப்புச் சிறந்தது என்றும் அவன் செய்யும் சாதனைகள் எண்ணற்றவை என்றும் பெருமை கொள்கிறான். வாழ்க்கையில் தான் பிறந்த நாளை எப்படித்தான் கொண்டாடுகிறான். சாதாரணமான மனிதன் தவிர மத்யதர, மேல்தட்டு மனிதர்கள் செய்வதென்ன? ஏதோ சிலர் கோவிலுக்குச் சென்று வழிபடுகிறார்கள். மற்றபடி கேக் வெட்டுவது, ஆடல் பாடல், கேளிக்கை இத்யாதிகளால் மகிழ்ச்சி அடைகிறான். இவ்வளவு செய்யும் மாந்தர்கள் ஒன்றை மறக்கின்றனர். ஒரு வயது கூடும் போதும் அவன் ஒரு வருடம் காலனுக்கு அருகில் போகிறான் என்று பொருள். இவன் மறந்து விட்ட விஷயத்தை வேதம்

**''யோ அஸௌ தபன்னுதேதி** என்னும் **அருண ப்ரஸ்ன**

வாக்யத்தால் நினைவுறுத்துகிறது. ஆதவன் உதித்து மறையும் ஒவ்வொரு நாளும் எல்லோருடைய வாழ்நாளில் இருந்து ஒரு நாள் எடுத்துச் செல்கிறான். அவன் மட்டுமல்ல. சந்திரன், ருதுக்கள், மாஸம் இவைகளும் அப்படியே. இப்படி எச்சரிக்கிறது வேதம். சரி இந்த வளர்ந்து வரும் life expectancy யில் அந்த வாழ்க்கையை நன்கு பயன்படுத்துகிறானா? இல்லை. பலர் அளப்பரிய சாதனைகள் புரிந்துள்ளனர். உண்மை. ஆனால் வாழ்வதின் தாத்பர்யம் இறைவனை உணர்வது தான். இதை மனிதன் உணர்வதாகத் தெரியவில்லை. எவ்வளவு சாதனைகளை அடுக்கிக் கொண்டே போனாலும் இந்த முக்யமான விஷயத்தைக் கோட்டை விட்டாயிற்று. கர்ம மார்கம், பக்தி மார்கம், ஞான மார்கம் என்ற மூன்று மார்க்கங்களை ஸ்ரீ சங்கரர் ஒழுங்குபடுத்தித் தந்துள்ளார். இதில் ஒரு மார்க்கத்திலும் பிடிப்பு

இல்லாமல் மக்கள் அலைகிறார்கள் என்பது விசனிக்கத் தகுந்ததே. விதி விலக்காக சிலர் உள்ளனர். மற்றபடி பெரும்பாலும் உலக மக்கள் இறையாமையை உணர்வதில் நாட்டம் காட்டுவதில்லை. இப்போது அல்ல. ஆதி சங்கரர் காலத்திலேயே இப்படித்தான் மக்கள் இருந்திருக்கிறார்கள். தன் பஜ கோவிந்தத்தில் கூறுவார்:-

**'' பாலஸ்தாவத் க்ரீடாஸக்த: தருணஸ்தாவத் தருணீஸக்த:**
**வ்ருத்தஸ்தாவத் சிந்தாஸக்த: பரப்ரம்மணி கோபி ந ஸக்த:''**

சிறுவனாயிருக்கையில் விளையாட்டில் லயிப்பு, இளைஞனாய் இருக்கையில் மனைவியிடத்தில் லயிப்பு, வயோதிகனாயிருக்கையில் கவலையில் லயிப்பு பரப்ரும்மனிடத்தில் ஒருவரும் லயிப்பதில்லை. த்ருவன், மார்க்கண்டேயன், ஆண்டாள், காரைக்காலம்மையார் இவர்கள் வாழ்நாள் சிறிதுதான். ஆனால் அவர்களின் spiritual சாதனை life expectancy குறைவாயிருந்தாலும் மகோன்னதமானது. அந்த வாழ்க்கை நமக்கு வசப்படுமா? நாட்களை வீணானாகப் போக்காமல் பயனுள்ளதாக ஆக்குவது நம் கையில் என்று கூறிக்கொண்டு இவ்விதழை மேலே சொன்ன விஷயத்திற்கு உதாரண புருஷர்களான ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

## வருந்துகிறோம்



தமிழ் தொல்லியல் துறையில் தனக்கென்று முத்திரை பதித்தவரும், தமிழ், ஸம்ஸ்க்ருதம், வேதம், சாஸ்த்ரங்களைப் பயின்றவரும், ஆழ்ந்த, அகலமான ஆராய்ச்சியை செய்தவரும், நுண்மான் நுழைபுலம் உள்ளவரும் ஸ்ரீமடத்தின் ஆசார்யர்களின் ஆசியைப் பெற்றவருமான **ஸ்ரீ நாகஸ்வாமியின்** மறைவுக்கு ப்ரதீபம் சார்பில் வருத்தம் தெரிவிக்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் ப்ரார்த்திக்கிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

### ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## கங்கை சுரக்கும் திருவடி



தாமரை என்றால் அதிலிருந்து தேன் சுரக்க வேண்டும். பகவானின் பாத தாமரையிலிருந்து எந்த தேன் சுரக்கிறது?

### திவ்யதுநீ மகரந்தே

'மகரந்தம்' என்றால் தேன். 'துநீ' என்றால் நதி. 'திவ்ய துநீ' என்றால் தேவ லோகத்து நதி. கங்கைதான் ஆகாசத்திலும் பூமியிலும் பாதாளத்திலும் மூன்று பெயர்களில் பாய்கிற நதி. மஹாபலி சக்ரவர்த்தியின் யாகத்தில் பகவான் குட்டை ப்ரம்மசாரியாக வந்து அப்புறம் விச்வாகாரமாக த்ரிவிக்ரமாவதாரம் செய்து ஒரே காலால் தேவலோகம் முழுவதையும் அளந்தார் அல்லவா? அப்போது அந்தப் பெரிய பாதம் தேவலோகத்தை எட்டிய போது ப்ரம்மா ஓடோடி வந்து அந்த திவ்ய சரணத்துக்கு அபிஷேகம் பண்ணினார். அப்படிப் பண்ணிய ஜலமே மந்தாகினி என்ற பெயரில் ஆகாச கங்கையாகிவிட்டது. அது தான் **'திவ்ய துநீ'.**

பகவானின் மஹா பெரிய பாத பத்மத்திலிருந்து அபிஷேக ஜலம் கங்கையாகப் பாய்வதைப் பார்க்கிறபோது வெளியிலிருந்து ப்ரம்மா அதில் ஜலத்தைக் கொண்டு வந்து வார்த்து அந்த ஜலம் வழிகிற மாதிரி இல்லை. பெரிய தாமரைப்பூ மாதிரி இருக்கிறதே இந்தப் பாதம், இந்தத் தாமரையே தான் அந்த கங்கையான தேனைத் தன்னிலிருந்தே பொழிய விடுவதுபோல் இருக்கிறது - **திவ்ய துநீ மகரந்தே.**

பகவானின் பாத தாமரை ஸுகந்தம் வீசுகிறது. நாமெல்லாம் ஸெண்ட் போட்டுக்கொண்டால் தான் வாஸனை. பகவான் ஸ்வாபாவிகமாகவே (இயற்கையாகவே) திவ்ய வாஸனை வீசுகிற தேஹம் கொண்டவன். 'ஸுகந்திம்', 'கந்த த்வாராம்' என்றெல்லாம் வேதத்திலேயே தெய்வ மூர்த்திகளைச் சொல்லியிருக்கிறது.

## ஸம்ஸாரம் நீக்கி ஸதாநந்தம் அருளும் அடி

**பரிமள பரிபோக ஸச்சிதாநந்தே** என்று ஆசார்யாள் சொல்கிறார். பரிமளம் என்றால் ஸுகந்தம். பரிமளரங்கநாதர் என்றே சொல்வதுண்டு. 'பரிபோகம்'--ஸௌகித்து ஸுகித்து -அநுபவிக்கக் கூடியது. எத்தனை ருசித்தாலும் திகட்டாத ஆனந்தம் தருவது. எப்படிப்பட்ட ஆனந்தம்? ஸாதாரண விருந்து, நிலாச் சாப்பாடு சாப்பிடுகிற ஆனந்தமா? இல்லை. (தைத்திரீய) உபநிஷத்தில் ஆனந்தத்துக்கு மேல் ஆனந்தம் என்று ஒவ்வொரு தினுஸான ஆனந்தத்தையும் அடுக்கிக் கொண்டே போய் அதன் உச்சியாகச் சொல்லியிருக்கிற ப்ரம்மானந்தத்தையே தருவது பகவானின் பாதம்.

ப்ரம்மத்தை ஸத்-சித்-ஆனந்தம் என்பார்கள். அது தான் அழியாத உண்மைப் பொருளான ஸத். அதுவே அறியப்படுவதாகவும் அறிகிறவனாகவும் கூட இருக்கிற அறிவு: சித். அந்த நிலையில் தனக்கு வேறாக எதுவுமே இல்லாமலிருப்பது தான் சாச்வத ஆனந்தம்: ஸச்சிதானந்தம். இந்த ஸச்சிதானந்தத்தையே தேனாகப் பொழிந்து கொண்டும், ஸுகந்தமாக மணம் வீசிக்கொண்டும் இருப்பது ஸ்ரீ பதியின் பாதாரவிந்தம் :

**திவ்யது நீ மகரந்தே**
**பரிமள பரிபோக ஸச்சிதானந்தே**
**ஸ்ரீபதி பதாரவிந்தே**

அது ஸச்சிதானந்தத்தைக் கொடுக்க வேண்டும் என்றால் அதற்கு முன்னால் இந்த ஸம்ஸார பயத்தைக் கெடுக்க வேண்டும்.

**பவ பய கேத - ச்சிதே வந்தே**

முதல் ச்லோகத்தில் **தாரய ஸம்ஸார ஸாகர த:** என்று வேண்டிக்கொண்டார் அல்லவா? அதில் வந்த ஸம்ஸாரமே இதில்' பவ பய' என்பதில் வரும் பவம்.

‘ஸம்ஸாரம்’ என்பதை ‘பவம்’, ‘பவம்’ என்றும் சொல்வார்கள். ‘பவவினை’ ‘பவஸாகரம்’ என்றெல்லாம் பாட்டுக்களில் வரும். பவம் என்றால் உண்டாவது. சரவணத்தில் உண்டானவன் சரவணபவன். உத்பவம் என்கிறோமே, அது ‘பவ’த்தின் அடியாகப் பிறந்த வார்த்தைதான். ஸம்ஸாரம் என்றால் நிலையில்லாமல் ஓடிக் கொண்டேயிருப்பது. அது ‘பவ’ மானது. அதாவது அது ‘உண்டான வஸ்து’. உண்டானது என்பதாலேயே இது அநாதியாக, ஸ்வயம்புவாக இருப்பதல்ல என்றும், இன்னொன்றிலிருந்து பிறந்ததே என்றும் தெரிந்துவிடுகிறது. இதற்கு ஆதியும், பிறப்பும் இருப்பதாலேயே அந்தமும், அழிவும் இருந்து தான் ஆக வேண்டும். இது எதனிடமிருந்து உண்டாயிற்றோ அந்த பரமாத்ம தத்வமே ஆதியந்தமற்ற நித்யவஸ்து.

பவன் என்று பரமேச்வரனுக்கும் பெயருண்டு. பவன், சர்வன், ருத்ரன், பசுபதி, உக்ரன் மஹாதேவன், பீமன், ஈசானன் என்ற எட்டுப் பெயர்களும் பரமசிவனுக்கு ரொம்பவும் விசேஷமானவை. பவனின் பத்னிதான் ‘பவானி’; சர்வனின் பத்னி ‘சர்வாணி’; ருத்ர பத்னி ருத்ராணி; இப்படியே ஈசானன்-ஈசானி. எல்லாவற்றையும் உண்டாக்குவதால் அவன் ‘பவன்’. அழிப்பதால் ‘சர்வன்’. ஆக்குகிறவனே, தான் அழிப்பவனும்! ‘பவ’ என்ற வார்த்தையை வைத்து மூகர் (‘பஞ்ச சதீ’யில்) வேடிக்கையாகச் சொல்வார்: ‘அம்மா! உன்னுடைய பாதம் பவனுக்கு (சிவனுக்கு) ரொம்பவும் ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டே இன்னொரு பக்கத்தில் பவத்தை (ஸம்ஸாரத்தை) அழிக்கிறதே என்று சொல்வார்.

அம்பாள் பாதத்தை மூகர் சொன்னார். அவளுடைய புருஷ ஸ்வரூபமேயான மஹாவிஷ்ணுவின் பாதத்தைச் சொல்லும் போது ஆசார்யாள், ‘ஸம்ஸார பயம்’ என்ற துன்பத்தை வெட்டி எரிகிறது பகவானின் பாதம் என்கிறார்.

**பவபய கேத ச்சிதே**

ஸம்ஸாரமானது பயத்தை மட்டுமில்லாமல் வேதனை, துக்கம், ஆயாஸம் எல்லாமும் தருகிறது. இவற்றைத்தான் ‘கேதம்’ என்று சொல்லியிருக்கிறது. ஸம்ஸார பயத்தையும், துக்கத்தையும் சிதைத்து அழிக்கும் திருவடிகளை நமஸ்காரம் பண்ணுகிறேன் என்கிறார்.

**பவபய கேத - ச்சிதே வந்தே**

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

# ஔவையார்

### சுட்டபழமா சுடாத பழமா



தமிழ் கற்கும் குழந்தைகள் அனைவரும் ஔவையாரை நன்கு அறிவர். ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று’ என்றும் ‘அறம் செய விரும்பு’ எனவும் தொடங்கும் அறிவுரை அறவுரைகளை அறியாதோர் யார்? வரலாற்று ஆசிரியர்கள் சங்ககாலத்தில் இருந்து இடைக்காலம் வரையில் இரண்டு அல்லது மூன்று ஔவையார்கள் இருந்ததாகக் கூறுவர். ஔவையாரின் வாழ்க்கை குறிப்புகளை வரலாற்று ஆராய்ச்சிச் சான்றுகளுடன் கூற இயலாது. அவரைப் பற்றி நாம் அறிந்தவை பெரும்பாலும் செவி வழிச் செய்திகளே.

ஔவையார் சிறந்த பக்தை, முருகப் பெருமான் ஔவையாரைச் சோதிக்க வேண்டி ஔவை வரும் வழியில் ஒரு நாவல் மரத்தின் மேல் மாடு மேய்க்கும் சிறுவன் வடிவில் ஏறி உட்கார்ந்ததாகவும், ஔவை அம் மரத்தின் அடியில் தங்கி இளைப்பாறும் பொழுது அச்சிறுவனை நாவல் பழங்களைப் பறித்துத் தருமாறு வேண்ட, அவன், ‘பாட்டி, சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?’ எனக் கேட்டு ஔவை விழிக்கவும், மரத்தைக் குலுக்கிக் கனிகளைச் சிதறடித்து அவற்றை ஔவை எடுத்து தூசு நீங்க ஊதிய போது ‘பாட்டி, பழம் சுடுகிறதா? ஊதுகிறாயே?’ எனக் கூறி நகைத்தாகவும், முருகன் அவளிடம் கொண்ட அன்பை வெளிப்படுத்தும் கதையைக் கூறுவர்.

சங்க காலத்தில் அதியமான் காட்டில் வேட்டையாடும் போது உணவு கிடைக்காமல் அபூர்வமானதோர் நெல்லிக் கனி ஒன்றைக் கண்டதாகக் கதை உண்டு. அக்கனி நீண்ட ஆயுளையும் அறிவாற்றலையும் தர வல்லது. பசியுடன் இருந்த அதியமான் அதை உண்ணும் தறுவாயில், மிகுந்த சோர்வுடன் நெடுவழி நடந்து பசியுடன் வாடி வந்த ஔவையைக்

கண்டதும் அவளுக்கு அக்கனியை அளித்தான். அதியமானின் கொடை ஔவையால் பாராட்டப்பட்டது. ஏழு வள்ளல்களில் அதியமானும் ஒருவனாகப் போற்றப்படுகிறான்.


ஔவையார் தொண்டை நாட்டிற்கு வந்தபோது தொண்டமான் போருக்கு ஆயுத்தம் செய்து கொண்டு இருந்தான். ஔவை அவனுடன் பாசறைக்குச் சென்று அவனுடைய ஆயுதங்களை பயன் படுத்தப்படாமல் அலங்கரிக்கப்பட்டு வைத்திருப்பதையும் அவனுடைய பகைவன் (அடிக்கடி போர் செய்து வெற்றி கொண்டதால்) ஆயுதங்கள் உலைக்களத்தில் பழுது பார்க்கப்படுவதையும் சுட்டிக் காட்டி இரு மன்னர்களையும் நண்பர்களாக்கி அமைதியை நிலைநாட்டினாள்.

ஔவையார் பக்தி நெறி மட்டுமன்றி யோக சித்தியும் கைவரப் பெற்றவர். ஒரு சமயம் விநாயகரைப் பூசை செய்யத் தொடங்கிய போது சற்று விரைவாக அவரைத் துதித்துப் போற்றினாள். விநாயகர் ஏன் என்று வினவ, சுந்தரர் யானை மீதும் சேரன் பெருமான் குதிரை மீதும் ஆரோகணித்துத் திருக்கயிலாயம் செல்வதாகவும் தானும் அவர்களுடன் செல்ல விரும்புவதாகவும் விண்ணப்பித்துக் கொண்டார். விநாயகர் அவளைத் தன் கடமையை வழுவாமல் செய்ய அறிவுறுத்தியதும் ஔவை நிதானமாக வழிபாடு நிகழ்த்தி 'விநாயகர் அகவல்' என வழங்கும் யோக ரகசியங்கள் அடங்கியதும் விநாயகரை முதல் ஞானம் வழங்கும் தெய்வமாக விளக்குவதுமான நூலைப் பாடி முடித்தாள். விநாயகர் மிகவும் மகிழ்ந்து தனது துதிக்கையால் ஔவையை எடுத்து இரு நாயன்மார்களுக்கும் முன்னதாகவே திருக்கயிலாயத்தில் அவளைச் சேர்ப்பித்தான் என்பர்.

அறிவையும் நன்னடத்தை விதிகளையும் இறை நாட்டத்தையும் பரப்பிய காலத்தை வென்ற இத்தமிழ் பாட்டிக்கு ஒவ்வொரு ஆலயத்தின் கோபுரத்திலும் சிலை வைக்கப்படுவதில் வியப்பேதும் உண்டோ?

# கண்ணகி

**கற்பின் கனல்**



தமிழுக்குப் பெருமைதரும் ஐம்பெரும் காப்பியங்களுள் மிகப் பழமையானது சிலப்பதிகாரம் ஆகும். 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' கண்ணகி என்ற

பதிவிரதையின் கதையைக் கூறுகிறது.

இன்று காவிரிப் பூம்பட்டினம் எனப்படும் கிராமம் முன்பு புகார் நகரமாக இருந்தது. அதன் பெரும் பகுதி இன்று கடலுள் கிடக்கிறது. முன்னொரு காலத்தில் புகார் நகரத்தில் மாசாத்துவான் என்ற வணிகன் மகன் கோவலனுக்கும் மாநாய்க்கன் என்ற வணிகன் மகள் கண்ணகிக்கும் திருமணம் நடந்தது. ஊழ் வினையால் கோவலன், மாதவி என்ற கணிகையால் கவரப்பட்டுத் தன் பெரும் பொருளையும் அவளுக்காகச் செலவிட்டான். இந்திர விழாவின் போது கோவலன் பாடிய பாட்டுக்கு எதிராக மாதவி பாடிய பாட்டைத் தவறாகப் புரிந்து கொண்டு முரண்பட்ட கோவலன் அவளைப் பிரிந்தான். புகார் நகரில் வாழ விருப்பமின்றி மதுரை செல்லத் துணிந்தான். கண்ணகியும் அவன் விருப்பப்படியே உடன் சென்றாள்.


மதுரை மாநகரில் கோவலன் கண்ணகியின் காற்சிலம்புகளில் ஒன்றினை விற்கச் சென்ற போது ஒரு பொற் கொல்லனைச் சந்தித்தான். அரசியின் காணாமற் போன சிலம்பை வைத்துக் கொண்டு இருந்த பொற் கொல்லன் கோவலனைத் தந்திரமாக அழைத்துச் சென்று அரசனிடம் அரசியின் சிலம்பைக் களவாடியவன் கோவலனே எனச் சாடினான். அரசனும் ஆராயாது கோவலனைக் கொலை செய்ய உத்தர விட்டான்.

கோவலன் மரித்ததும் கண்ணகி பெரும் துயரடைந்து அரசனிடம் நீதி கேட்டாள். கண்ணகியிடம் இருந்த மற்றொரு சிலம்பும் கோவலனிடம் இருந்து கைப்பற்றப்பட்டதும் ஒத்திருந்தன. அரசியிடமிருந்த சிலம்பு வேறுவகையானது என்று காணப்பட்டது. நீதி தவறியதால் வாட்டமடைந்த அரசன் உயிர் நீத்தனன். அரசியும் மரித்தாள். கண்ணகி சினம் ஆறவில்லை. மதுரை நகரில் அறம் தவறாதவர், அந்தணர், பெண்டிர், பசுக்களைத் தவிர தீயது அனைத்தும் எரியட்டும் எனக் கண்ணகி கூறவும் அவ்வாறே மதுரை தீப்பற்றியது. கண்ணகி மேற்கு நோக்கிச் சென்று மலை மீது ஏறினாள். அங்கு விமானத்தில் அவளும் அமர அது வானுலகம் சென்றதைக் கண்ட வேட்டுவர்கள் சொன்ன வரலாறு இளங்கோவடிகளுக்கு எட்ட, அவர் இப்பத்தினித் தெய்வத்தின் வரலாற்றைச் சிறந்த காப்பியமாகப் பாடியுள்ளார்.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## தேனம்பாக்கம் விழாவில் காணொளி மூலம் பெரியவா ஆற்றிய அருளுரை



இங்கே தேனம்பாக்கத்தில் ரொம்ப நல்ல விஷயம் நடந்து கொண்டு இருக்கிறது. விவரங்கள் எல்லாம் கேட்டு வாங்கிப் பார்த்தோம். இந்த சிவாஸ்தானம் என்று சொல்லப்படுகிற இடத்தில் கடந்த ஒரு வார காலமாக ஒரு வேத மஹா சம்மேளனமே நடந்து கொண்டு இருக்கிறது. இங்கு இருக்கும் சுவாமி பெயர் பிரம்மபுரீஸ்வரர். ஸ்ரீ ஆச்சாரியாளே இங்கு வந்துள்ளதாக தெரிகிறது. பிரம்மபுரி என்றால் வேதம் எப்பொழுதும் சொல்லப்படுகிற இடம். பிரம்மா இங்கு வந்து ரிக் வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வ வேதம் - என சதுர்வேதங்களையும் சொல்லிக் கொடுத்த இடம். பிரம்மாவே அருளியதால் இந்த இடமே பவித்தரமாக இருக்கிறது. அந்த பிரம்மபுரீஸ்வரர் சந்நிதியில்,

***யக்ஞோ தானம் தபஸ்சைவ பாவனானி மனிஷிணாம்***
***ஏதான்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலானி ।***
***கர்த்தவ்யானீ தி மே பார்த்த நிஸ்சிதம் மதமுத்தமம் ।।***

பகவத்கீதையில் சொல்கிறார் ஸ்வாமி ***யக்ஞோ தானம் தபஸ்சைவ பாவனானி மனிஷிணாம்***

*-இந்த மனிதப் பிறவியை புனிதப்படுத்துகிற விஷயங்கள் மூன்று. யக்ஞம், தானம் தபஸ் ஆகியவை அவை. அந்த மூன்றும் சம்பந்தப்பட்ட ஊராக, இந்தத் தேனம்பாக்கம் விளங்குகிறது.*

*யக்ஞம் - பிரம்மா காஞ்சிபுரத்திற்கு வந்த நோக்கமே யாகம் செய்வதற்காகத் தான். அவர் முதலில் யாகம் செய்ய தேர்ந்தெடுத்த ஊர் அலஹாபாத் (பிரயாக்ராஜ்) க்ஷேத்திரம். அங்கு போன இடத்திலே, யாகம் நடந்து கொண்டு இருக்கும் நேரம் ஒரு அசரீரி வாக்கு வந்தது. ''யாகம் செய்வது நல்ல காரியம் நிறைய யாகம் பண்ண வேண்டியிருக்கிறது. தெற்கில் காஞ்சிபுரம் என்ற ஊர் இருக்கிறது. சத்தியவ்ரத க்ஷேத்திரம் என்று பெயர் அதற்கு. அந்த சத்திய வ்ரத க்ஷேத்திரத்திர்க்குப் போய், யாகம் செய்தால், ஒரு யாகம் செய்தால், பல யாகம் பண்ணின புண்ணியம் கிடைக்கும். எனவே அங்கு போய் யாகம் செய்யலாம் '' என்று அசரீரீ மூலம் உத்தரவு வந்ததால் காஞ்சிபுரம் வந்து யாகம் செய்தார்.*

*அந்த சத்யவ்ரத க்ஷேத்ரத்தில் ஓடுகிற சரஸ்வதியுடைய சொரூபம் தான் இங்கு உள்ள வேகவதி ஆறு. அந்த நதிக்கரையில் அமைந்துள்ள இந்த சிவாஸ்தானத்தில் வேத பாடசாலை உள்ளது சிறப்பான விஷயம். நிறைய இங்கு வேதத்தை வளர்க்கிறார்கள் மிக்க மகிழ்ச்சி.*

*தானம் - எல்லோருக்கும் ஸ்வர்ண தக்ஷிணை, வாத்தியார்களுக்கும் சரி, வித்யார்த்திகளுக்கும் சரி, ஸ்வர்ண தக்ஷிணை, செர்டிபிகேட் எல்லாம் நிறைய கொடுத்து வருகிறார்கள். இந்த கலியுகத்தில் தானம் முக்கியம் என்று சொல்லி இருக்கிறது. அந்த விதமாக இந்த தானம் மூலமாக எல்லோரையும் கவுரவப்படுத்துகிறார்கள்.*

*தபஸ். இங்கே பெரியவா வருஷக் கணக்காக மௌனமாக நியமங்களுடன் இருந்து, ஜனங்களுக்கு நிறைய ஆசிர்வாதம் பண்ணிய இடம். அந்த இடம் தபஸ்க்கு பொருத்தமான இடம். யக்ஞத்திற்கு பொருத்தமான இடம். பிரம்மா யாகம் பண்ணிய இடம் விஷ்ணு காஞ்சி.* **வபா பரிமள உல்லாசி, வாசித அதர பல்லவம், முகம் வரதராஜஷ்ய மன்தஸ்மித உபாஸ்மஹே -** *அந்த யாக குண்டத்திலிருந்து மந்த ஹாச முகத்தோடு வரதராஜ ஸ்வாமி வந்து தரிசனம் கொடுத்தாராம். ஸ்ரீ பெரியவா தேனம்பாக்கத்தில் இருந்த போது, அந்த வரதராஜப் பெருமாள் கோவில் பிரதக்ஷிணம் பண்ணியுள்ளார். மாடவீதி ப்ரதக்ஷிணம். அதற்கு அப்பறம் தான் வடநாட்டிற்கு யாத்திரை கிளம்பினார். அங்கு மாடவீதியில் வேத பாராயணம் எல்லாம் இன்றும்*

நடக்கிறது அந்த மாடவீதி பாராயணத்திற்கு பெரியவா அனுக்ரகம் காரணம். வேத பாராயணத்திற்கான யக்ஞ பூமி அது. சின்ன காஞ்சிபுரம், தேனம்பாக்கம் எல்லாம் யக்ஞ பூமி.

தபஸ்க்கு உதாரணமாக, பெரியவா இந்த சிவாஸ்தானத்தில் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் இருந்து, பாஷ்யங்கள் எல்லாம் பிரச்சாரம் பண்ணி; அவர்கள் கூட கைங்கர்யம் பண்ணிண்டு இருந்த ஸ்ரீ கண்ட ஸ்வாமிகள், வேதபுரி சாஸ்திரி, ஆகியோருக்கு பாடங்கள் அவாளே சொல்லிக் கொடுத்து - அதாவது தர்க்க சங்க்ரகம், மற்ற சத் விஷயங்கள் அவாளே, நிறைய சொல்லிக் கொடுத்துள்ளார்கள் இங்கே தேனம்பாக்கத்தில் அத்வைத சபா நிறைய நடந்திருக்கு. அப்படிப்பட்ட ஊரிலே, வேதம் நித்யபடி நல்லா வளர்ந்து கொண்டு வருகிறது. நூற்றுக்கணக்கான வித்யார்த்திகள் தயாராகி, அங்கங்கு வைதீகத்தில் இருக்கிறார்கள். அந்த அதிர்ஷ்டம் இந்த தேனம்பாக்கத்திற்கு இருக்கிறது.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# யோகவாஸிஷ்டத்தில் பகவத்கீதை

***ஸ்ரீ வஸிஷ்டர் :*** *ஹே ராமா! பகவான் க்ருஷ்ணர் சொல்லப் போகும் பற்றின்மை பற்றிய யோகத்தை சொல்லுகிறேன். அந்த உபதேசத்தை கேட்டு பாண்டு புத்ரன் அர்ஜுனன் ஜீவன் முக்த நிலையில் தன் வாழ்க்கையை நடத்த போகிறான்.*

***ஸ்ரீராமர் :*** *பூஜ்ய குருவே! பாண்டு குமாரன் அர்ஜுனன் இவ்வுலகில் எப்பொழுது உண்டாவான். பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர் எந்நிலையில் அவருக்கு உபதேசிப்பார்.*

***ஸ்ரீ வஸிஷ்டர் :*** *ஒருஸமயம் பூதேவி, பாபிகள் அதிகமாய் பாரம் தாங்காமல் அவதியுறுவாள். அந்நிலையில் பூதேவி ஸ்ரீ மஹாவிஷ்ணுவை சரணடைய செல்வாள். பூதேவியின் பிரார்த்தனைக்காக பகவான் விஷ்ணு, நரன்-நாராயணன் என்று இருசரீரங்கள் எடுத்து கொண்டு பூமியில் அவதரிப்பார். நாராயண ஸ்வரூபத்துடன் எடுத்துக் கொள்ள போகும் அவதாரம், ஸ்ரீ வாஸுதேவன் என்று ப்ரஸித்தியாகும். அம்சாவதாரமாய் நரரூபத்துடன் எடுத்துக் கொள்வதை, அர்ஜுனன் என்று க்யாதியுடன் சொல்வார்கள்.*

*ஸாக்ஷாத் தர்மதேவதையின் குமாரர் யுதிஷ்டிரர் என்னும் பெயருடன் தோன்றுவார். அவருக்கு எதிரியாக துர்யோதனன் தோன்றுவான். இருவரும் ராஜ்ய ஆசையால் குருக்ஷேத்ரத்தில் 18 அக்ஷௌஹினி ஸைன்யத்துடன் சண்டையிடுவார்கள். ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ க்ருஷ்ணர், இந்த யுத்தம் மூலமாய் பூமியின் பாரத்தை குறைப்பார்.*

*அர்ஜுனன் ஆரம்பத்தில் யுத்த பூமியில் தனது ஆசார்யார்களையும் உறவினரையும் பார்த்து, மன நிலை குழம்பி -- யுத்தமே வேண்டாம் என்று வில்லை கீழே போடுவான். அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணர், அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்வார்.*

***ஸ்ரீ க்ருஷ்ணர் :*** *அர்ஜுனா! ஆத்மா ஒருநாளும் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. அது நித்யமானது. அழிவில்லாதது. கொல்லுகிறேன் என்று எண்ணுகிறவனும்; கொல்லப்படுகிறேன் என்று எண்ணுகிறவனும் அறியாமையால் எண்ணுகிறார்கள். ஏனெனில் ஆத்மா லுவதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை. ஆகாசத்தை (வெட்டவெளி) போல் எங்கும் நிறைந்த ஆத்மாவை எப்படி கொல்ல (இல்லாமல் செய்ய) முடியும். ஆத்மாவுக்கு குறைவோ, அழிவோ கிடையாது. நீ உன் உண்மையான ஸ்வரூபத்தை த்யானித்து, ஆலோசித்தால் நித்யமான சைதன்ய ஸ்வரூபன் நான் என்பதை உணருவாய்.*

அர்ஜுனா! நீ சித்ரூபமான எவனது அந்தகரணத்தில் ''நான் செய்கிறவன்' என்கிற எண்ணம் இல்லையோ? எவன் உலக விஷயங்களிலும், கார்யங்களிலும் ஈடுபாடு இல்லாமல் உள்ளானோ, அவன் அதே மனநிலையில் பலரை கொன்றாலும் கொலையாளி ஆகமாட்டான். அந்த பாபம் அவர்களை தீண்டாது. நீ இவர்கள் எனது ஆசார்யர்கள், உறவினர்கள் என்ற புத்தியை விட்டு விடு. நான் என்னும் மமதையால் உண்மை அறிவை இழந்தவன் 'நான் செய்கிறேன்' என்று எண்ணுகிறான். மஹாத்மாக்களுக்கு ''நான்' என்று ஒரு வஸ்துவே கிடையாது. அனைவரும் (பலர்) சேர்ந்து நடத்தும் ஒரு கார்யத்தை நான் செய்தேன் என்று ஒருவன் எண்ணினால் அது பரிஹஸிக்கத் தகுந்தது. கர்மயோகி, தான் என்னும் எண்ணம் இல்லாமல் உடல், உறுப்புகள் எல்லாவற்றிலும் பற்றை விட்டு, தன் உள்ளத்தின் அழுக்கைப் போக்கவே கார்யங்களை செய்கிறான். அவர்கள் கார்யங்களை செய்தாலும், அதில் ஈடுபாடில்லாமல்; தான் செய்கிறோம் என்னும் எண்ணமில்லாமல் செய்வதால், செய்யும் கார்யங்கள் அவர்களிடம் ஒட்டுவதில்லை.

க்ஷத்ரியர்களுக்கு ஸ்வதர்மம், ராஜ்யபரிபாலனம். அதன் அங்கம் யுத்தம். யுத்தம் கொடுமையான கார்யம், ஆனாலும் ''நான் செய்கிறேன் என்கிற எண்ணம் இல்லாமல்'' எனது கடமை என்னும் எண்ணத்துடன் விருப்பு வெறுப்பு இல்லாமல் செய்தாயேயானால், உனக்கு நன்மையும், ஸுகமும் கிடைக்கும். விருப்பு, வெறுப்பு இல்லாமல் இது ந்யாயம், இது எனது கடமை என்னும் எண்ணத்துடன் செய்யும் செய்கை, அவனிடம் ஒட்டாது. தான் பிரம்மம் என்னும் எண்ணத்துடன் கார்யங்களை செய்து அதையும் பிரம்மத்திற்கு அர்ப்பணம் செய்து விட்டால், நீயும் ப்ரும்மமாக ஆகிவிடுவாய்.

ஸம்ஸ்காரங்களால் சுத்தமான மனதையுடையவன், பரமாத்மாவை அடையும் ஸாதனத்தை ஞானம் என்கிறோம். எல்லாவிதமான பலன்களையும் த்யாகம் செய்வது ஸந்யாஸம். வாஸ்தவத்தில் ஜீவனும் சைதன்யமும் ஒன்று. பெயர், உருவம் இரண்டில் தான் வேறுபாடு. ஜகத் ப்ரும்மமயம் தான். என்னை நமஸ்கரித்து மனதை என்னிடம் செலுத்து. எனது பக்தனாக ஆகி என்னையே நீ அடைவாய். எனக்கு இரு உருவங்கள். ஒன்று ஸாமான்ய உருவம். மற்றது பரம உருவம், சங்கு, சக்ர, கதா பத்மத்துடன் உள்ளது ஸாமான்ய உருவம். விகாரம், குணம், உருவம், எதுவும் இல்லாதது பரம உருவம். நீ ஆதி, அந்தமில்லாத எனது பரம உருவத்தை அறி.

எனது பரம உருவத்தை அறிந்தவன் பிறப்பு, இறப்பிலிருந்து நீ ஸத்யமானதும் இரண்டற்றதுமான ஆத்மஸ்வரூபமாக யோகாவாஸிஷ்டத்தில் பகவத்கீதை ஆகி எங்கும் நிறைந்த சைதன்யத்துடன் ஒன்றாய்விடு. எல்லாவற்றையும் ஸமமாய் அறி.

இப்படி அறிந்தவன் உலக வ்யவஹாரங்களில் ஈடுபட்டிருந்தாலும், மீண்டும் பிறவியை அடையமாட்டான். எல்லாம் ஆத்மாதான். ஆத்மா தான் எல்லாம் என்று அறி. பரமாத்மா ஸத்ஸத் விலக்ஷணன். உள்ளிலும், வெளியிலும், எல்லாவற்றிலும் இருந்தும், சரீரத்தினுள் இருந்தும், எல்லோருக்கும் புலப்படுவதில்லை. எப்படி ஆயிரம் குடங்கள் இருந்தாலும் அவைகளில் இருக்கும் ஆகாசம் (வெளி) ஒன்றோ, அதேபோல, மூவுலகங்களில் இருக்கும் ஜீவன்களிலும் உள்ளும், வெளியிலும் இருப்பவன் நானே. ஆனால் ஸூக்ஷ்ம உருவில் இருப்பதால் எல்லோருக்கும் புலப்படுவதில்லை. ப்ரும்மம் முதல் புல் வரை எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவர்கள் என்னை நித்யமான பரமாத்மாவாய் அறிகிறார்கள்.

எப்படி ஜலத்தில் பலவித அலைகள், சுழிகள் உள்ளனவோ, எப்படி தங்கத்தில் வளையல்கள், குண்டலங்கள் முதலிய ஆபரணங்கள் உள்ளனவோ, அது போல, பரமாத்மாவிடத்தில் ஸமஸ்த பூதங்கள், ப்ராணி வர்க்கங்கள் உள்ளன. அவை அனைத்தும் பரமாத்மாவை தவிர வேறில்லை. எல்லாவற்றையும் ஒரே பரமாத்மாவாக பார்.

இந்த்ரியங்களுக்கு விஷயங்களுடன் ஏற்படும் சேர்க்கையால் உண்டாகும் ஸுகம், துக்கம், குளிர்ச்சி, சூடு போன்றவையெல்லாம் அழிவுடையது. ஆதலால் அநித்யம் எப்படி குறைவான ஒளியில் கயிற்றை பாம்பு என எண்ணி பயப்பட்டவன், இது கயிறு என்று தெரிந்த உடன், பாம்பினால் ஏற்பட்ட பயம் போய்விடுகிறதோ, அது போல் அக்ஞானத்தால் ஏற்பட்ட தேஹம், துக்கம், சூடு, அவமானம் போன்ற ஸமஸ்த துக்கங்களும், எல்லாம் பரமாத்மாவே என்ற உண்மை அறிவு (ஞானம்) ஏற்பட்டதும் மற்றவை எல்லாம் நாசமடைந்துவிடும்.

ஹே அர்ஜுனா! நீ ஸுகம், துக்கம், இலாபம், நஷ்டம், ஜயம், அபஜயம் என்று அக்ஞானத்தால் ஏற்படும் எண்ணங்களை விட்டு, உண்மையாக உள்ள ஒரே வஸ்துவான பரமாத்மாவை அறி. ப்ரும்மமாய் ஆகிவிடு. ஏனெனில், நீ வாஸ்தவத்தில் ப்ரும்மமே. எவன் எல்லா கார்யங்களிலும், அதன் பலன்களிலும் உள்ள பற்றை விட்டு, உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு இருக்கிறானோ, அவன் எல்லா கார்யங்களையும் செய்து கொண்டிருந்தாலும், ஒரு கார்யத்தையும் செய்கிறவனாக ஆகிறதில்லை.

எப்படி பல நதிகளின் ஜலம், பரிபூர்ணமான அசையாத ஸமுத்ரத்தில் கலந்து ஒன்றாய் விடுகிறதோ, அதுபோல் தெளிவடைந்த ஞானி (ஸ்திதப்ரக்ஞன்)யிடம் எல்லாவிதபோக ஐச்வர்யங்களும், மனதில் எந்தவித ஸ்ரீ காஞ்சி புஷ்பாஞ்ஜலி

விகாரத்தையும் உண்டு பண்ணாமல் கலக்கும். இந்த உலகம், பார்க்கப்படும் வஸ்துக்கள் எல்லாம் எந்த நாசமில்லாத வஸ்துவினால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ, அதை அறிந்துகொள். ஹே அர்ஜுனா! உள்ளது ஒரே ஆத்மா தான். அதற்கு நாசம் ஏற்படாது. நீ யுத்தம் செய். தேசத்தாலும், காலத்தாலும் இந்த சரீரம் உளுத்து போனதும், இதைவிட்டு ஜீவன் வேறு சரீரத்தில் அந்த ஸமயத்தில் உள்ள எண்ணத்தை பொறுத்து புகுகிறான். இதை தான் இறந்தான் பிறந்தான் என்று சொல்லுகிறார்கள்.

அக்ஞானிகளுக்கு அனாத்மாவான தேஹத்தில் ஆத்ம பாவனை ஏற்படும். உண்மை அறிவினால் பரமாத்மாவை தெரிந்து கொண்டதும், இந்த வாஸனை ஒழிந்து விடும். எப்படி ஆமை தன் அங்கங்களை தன் உள்ளேயே அடக்கிக் கொள்கிறதோ, அதுபோல் இந்த்ரியங்களை விஷயங்களிலிருந்து இழுத்து, அந்தகரணத்தில் அடக்க வேண்டும். எப்படி ஸ்வப்னத்தில் மனதால் தோன்றும் எல்லா வஸ்துக்களும் க்ஷணமாத்ரத்தில் நாசமடைந்து விடுகிறதோ, அதுபோல் தான் இப்ப்ரபஞ்சமும். எப்படி படத்தில் எழுதப்பட்ட உருவங்கள் பொய்யானவையோ, அதுபோல் உன் மனமாகிற திரையில் எழுதப்பட்ட இந்த ப்ரபஞ்சமும் பொய்யே. எப்படி தனக்கு ஆதாரமான கண்ணாடியில் ப்ரதி பிம்பம் தோன்றுகிறதோ, அது போல தனக்கு ஆதாரமான ப்ருஹ்மத்தில் இந்த ப்ரபஞ்சமும் தோன்றுகிறது.

உலக விஷயங்கள் பல நன்கு அறிந்திருந்தாலும், சாஸ்த்ரீயமான கார்யங்கள் எவ்வளவு செய்து கொண்டிருந்தாலும், வாஸனை (எண்ணம், பற்று, ஆசை)யிலிருந்து விடுபடாமல் இருந்தானேயானால், அவன் கூண்டில் அடைப்பட்ட சிங்கம் போல் கட்டுண்டவனே. பரமாத்மா காணப்படும் ப்ரபஞ்சத்திலிருந்து வேறானவர். வாக்குக்கு எட்டாதவர். அப்படிப்பட்ட பரமாத்மாவுக்கு உவமையாக எதைச் சொல்ல முடியும். ஹே அர்ஜுனா! உனக்கு இஷ்டமான ஆசைகளை விட்டு, விஷய ஸுகம் என்னும் விஷயத்தினால் ஏற்படும் ஆபத்திலிருந்து மனதை அப்புறப்படுத்தி, ஸம்ஸார ஸாகரத்திலிருந்தும் பயங்களிலிருந்தும் விடுபட்டு, பரமாத்ம ஸ்வரூபமாய் ஆகி, பரமானந்தத்தை அடைவாயாக!

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 1

**ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்**

**பி. ஆர். கண்ணன்**

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன்

**ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**

என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

**ஹிரண்யகர்பாதி ஸ்தாவராந்த்ரேஷு சரீரேஷு யதேகம் சைதன்யமஸ்தி ததேவாஹமஸ்மீதி த்ருட ஞானம் பூயாத் ।। 1**

*எந்த சைதன்ய வஸ்து ஹிரண்யகர்பர், தாவரங்களின் உடல்களில் உறைகிறதோ அந்த வஸ்துவே நான் என்னும் திட ஞானம் வரட்டும்.*

**நிர்விகல்ப ஸமாதி ப்ரதிபந்தக லய விக்ஷேப கஷாய ரஸாஅஸ்வாதேப்யோ ரக்ஷிதம் மே சித்தம் அவிக்னேன ப்ரம்மணி அவஸ்திதம் பூயாத் ।। 2**

*லயம், விக்ஷேபம், கஷாயம், ரஸாஸ்வாதம் முதலான நிர்விகல்ப ஸமாதிக்குத் தடைகளிலிருந்து என் சித்தம் காப்பாற்றப்படட்டும்.*

**விளக்கம்** *லயம், வ்ருத்தி, ஞானத்தில் மனம் தூங்குதல், விக்ஷேபம் வெளி பொருள்கள் குறித்து மனம் போதல், ரஸாஸ்வாதம் வெளி பொருள்கள் இல்லாதிருப்பினும் அவைகளின் நினைவுகளில் இன்புறுதல், கஷாயாம் யோகிக்கு ராக த்வேஷங்கள் இல்லாமலிருந்தாலும் பூர்வ வாஸனைகள் அதன் பக்கம் திருப்பும்.)*

**நித்ய நிர்விகார அஸங்க அத்விதீய பரிபூர்ண சச்சிதானந்த ஸ்வப்ரகாச சிதேகரஸ ப்ரம்மானுபவ ஸித்திர் பூயாத் ।। 3**

*நிர்விகாரமும், நித்யமாய் இருப்பதும் எதோடும் சேராததும், அத்விதீயமான சச்சிதானந்த ஸ்வப்ரகாசமான ப்ரம்மானுபவம் ஸித்தியாகட்டும்.*

**அஹமாதி த்ருஸ்யவிலக்ஷண அஸ்மத்ப்ரத்யய ஆலம்பனபூத ப்ரத்யக் சின்மாத்ர ஸ்வரூப ஆத்மானுபவ ஸித்திர் பூயாத் ।। 4**

*பார்க்கப்படும் பொருள் போல் தோன்றும் நான் என்னும் உணர்வு நீங்கி சின்மாத்ர ஸ்வரூப ஆத்ம அனுபவம் ஸித்திக்கட்டும்.*

**ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேத ரஹித அகண்ட சச்சிதானந்த அத்விதீய ப்ரம்மானுபவ ஸித்திர் பூயாத் ।। 5**

*ஸஜாதீய விஜாதீய ஸ்வகத வேற்றுமைகள் இல்லாத அகண்டமான சச்சிதானந்த ப்ரம்ம அனுபவம் ஸித்திக்கட்டும்.*

*ஸஜாதீயம் இரண்டாவது ப்ரம்மம் இல்லாமை, இருக்க முடியாமை, விஜாதீயம் தென்னை மரம், மாமரம் என்று வேற்றுமை இல்லாமை, ஸ்வாகதம், வேர், இலை, பட்டை, காய், கனி என்று தன்னுள்ளேயே பேதமில்லாதிருத்தல்.*

**நித்ய சுத்த புத்த முக்த ஸத்ய பரமானந்த அத்விதீய ப்ரம்மானுபவ ஸித்திர் பூயாத் ।। 6**

*எப்போதுமிருப்பதும், சைதன்யமானதும், முக்தமாயிருப்பதும், பரமானந்த அத்விதீய ப்ரம்மானுபவம் எனக்கு ஸித்திக்கட்டும்.*

**ஸ்வகதாதி பேத ரஹித அகண்ட சச்சிதானந்த லக்ஷண ப்ரம்ம அபின்ன கூடஸ்த ப்ரத்யக் ஸ்வரூப ஸர்வ ஸாக்ஷீதி சித்ரூப அனுபவ ஸித்திர் பூயாத் ।। 7**

*ஸ்வாகதம் முதலிய பேதமில்லாததும், அகண்டமானதும், அபின்னமானதும், ஸர்வஸாக்ஷியாயிருப்பதும் சித்ரூப அனுபவம் ஸித்திக்கட்டும்.*

**ஸ்வாத்மானோ அன்யத்வேன ப்ரதிபாதம் ஸகலம் ஸாக்ஷ்யம் ஜகத்ஸ்வா வித்யா விலஸிதத்வேன ஸ்வானன்யத்வாத் ஸ்வாத்மமாத்ரமிதி அத்விதீய ப்ரம்மாத்மானுபவ ஸித்திர் பூயாத் ।। 8**

*பார்க்கப்படும் ப்ரபஞ்சம் அவித்யையால் உண்டானது, மேலும் அது அத்விதீயமான ப்ரம்மத்தினின்று வேறுபட்டது அன்று என்னும் அனுபவ ஸித்தி எனக்கு உண்டாகட்டும்.*

**அஸம்பாவனா விபரீத பாவனா ரஹிதத்வேன கரதல ஆமலகவத் அஹம் ப்ரம்மாஸ்மீதி அப்ரதிபத்த அபரோக்ஷ ப்ரம்ம ஸாக்ஷத்காரோ த்ருடீ பூயாத் ।। 9**

*அஸம்பாவனை, விபரீதபாவனை இல்லாததும், உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிவதும், நான் ப்ரம்மம் என்னும் நேருக்கு நேர் ஏற்படும் ப்ரம்ம ஸாக்ஷாத்காரம் திடமாகட்டும்.*

*அஸம்பாவனா, ஜீவ ப்ரம்ம ஐக்யம் உண்மையா என்று ஐயப்படல் விபரீத பாவனா பார்க்கும் உலகம் மெய். ஜீவன் ப்ரம்மத்தினின்று வேறானது என்று தோன்றுதல்.*

**யோ ப்ரம்மாதி ஸ்தம்பபர்யந்தம் ஸர்வேஷாம் ப்ராணினாம் தேஹ மத்யே தத்தேஹ ஸாக்ஷித்வேன பாஸமான; பரிபூர்ண ஆத்மாஸ்தி ஸோ அயம் பரமாத்மா கேவலம் முமுக்ஷோ: புருஷஸ்ய மே ஸ்வரூபம் இத்யேவம் ரூபம் ஆத்ம ஸாக்ஷாத் காரோ த்ருட பூயாத் ॥ 10**

*எந்த என்னுடைய ஆத்மாவின் மோக்ஷத்திற்காக முயல்கிறேனோ, அந்த ஆத்மா ப்ரம்மம் முதல் புல் வரையில் எல்லா ப்ராணிகளின் உடலில் ஸாக்ஷியாகவும், ஸர்வ வ்யாபியான பரமாத்மாதான் என்னும் ஸாக்ஷாத்காரம் திடமாகட்டும்.*

(தொடரும்)

ஸ்ரீ சந்திரமௌளீஸ்வராய நம:



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# ப்ரபோத சிந்தாமணி

ஆயுஷ்மன்

***ஜாத: ஸூர்யகுலே பிதா தசரத: க்ஷோணீ புஜாமக்ரணம்***
***ஸீதா தஸ்ய பராயணா ப்ரணயினீ யஸ்யானுஜோ லக்ஷ்மண:***
***தீர்தண்டோ ஸமோ ந சாஸ்தி புவனே ப்ரத்யக்ஷ விஷ்ணு: ஸ்வயம்***
***ராமோ யேன விடிம்பிதோபி விதினா சான்யே ஜனே கா கதா ।।***

பிறப்போ சூர்ய குலத்தில். பிதாவோ தசரதர். விசாலமான பூமி ஆளுகைக்கு, ஸீதை அவரையே நினைத்துருகும் மனைவி, கூடவே தொடர்ந்த லக்ஷ்மணன், யுத்தத்தில் அவருக்குச் சமம் யாருமில்லை, விஷ்ணுவேதான் ராமர். அவருக்கு விதியின் விளையாட்டைப் பார்த்தால் ஸாமான்ய ஜனத்தின் கதி என்ன?

பல தரப்பட்ட மக்கள் பலதரபட்ட வாழ்க்கை முறைகள். மக்களின் வாழ்க்கையில் ஏற்றம், இறக்கம் மாறி மாறி வருகின்றன. துன்பமோ, இன்பமோ தருகின்றன. இறக்கம் வரும்போது மனிதன் விதியை நொந்து கொள்வான். ஏற்றம் வரும்போது தன்னுடைய முயற்சி என்பான். யதார்த்த நிலை. இதில் எல்லாம் விதியின் பயன் என்று நொந்து கொண்டு ப்ரயத்னமே செய்யாமல் இருப்பவர்கள் பலர். இவர்கள் முன்னேற்றமடைய வேண்டும் என்று எண்ணி பல எழுத்தாளர்கள் பல சுய முன்னேற்றப் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். பலர் பயனடைந்தும் இருக்கிறார்கள். ஆனால் சற்று யோசித்துப் பார்த்தால் உண்மை வேறுவிதமாக உள்ளது. எத்தனையோ பெரிய தலைவர்கள், ப்ரபுக்கள் ப்ரபலமானவர்கள், இவர்களது வாழ்க்கை ப்ரம்மிப்பாக உள்ளது. உதாரணமாக ஹிட்லரை எடுத்துக் கொள்வோம். உலகையே தன் கொடுங்கோலால் ஆட்டிப் படைத்தவனின் முடிவை எண்ணிப் பார்ப்போம். அவனே பெரும் தோல்வியை எதிர்பார்க்கவில்லை. முடிவு தற்கொலை. நமது புராணங்கள் பல பேரை காட்டும்.

ஹரிச்சந்த்ரன், பாண்டவர்கள், ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தி இப்படி பல புராண கதாநாயகர்கள் பெரிய அவதாராமாயிருப்பினும் விதிக்குப் பகடைக் காயாகத்தான் இருந்திருக்கின்றனர். **''ஊழிற் பெரு வலி யாவுள''** என்று வள்ளுவர் கூற்று எவ்வளவு உண்மை என்பது இவர்களது சரித்ரம் கூறும். அவர்களது கதியே

இப்படி என்றால் நம் கதி என்ன என்னும் அச்சம் நமக்கு வருவது இயற்கை. இப்படி சோம்பி விடாமல் இருக்க சுய முன்னேற்றப் புத்தகங்கள் உதவும். மறுப்பதற்கில்லை. இருப்பினும் விதி வலியதுதான் என்பதை மறுப்பதிற்கில்லை. இதைத்தான் மேற்கண்ட ஸ்லோகம் கூறுகிறது. யதார்த்தமாகவும் உள்ளது. இன்னொரு ஸ்வாரஸ்யமான விஷயம் மேற்கூறிய நாயகர்கள் முன்னேறி வெற்றியும் பெற்றனர். இதுவும் அந்த விதியின் பரிசுதானே. விதியை மீற முடியாது என்பதுதான் உண்மை.


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

ப்ரதீபப் பேழை

# பாணாழ்வார் கண்ட பாதாதிகேசம்

திருவாழ்மார்பன்

## பாணாழ்வாரின் பக்தித் திறம்

முதலாழ்வார்கள் மூவரும் எம்பெருமானுடைய பரத்துவத்திலே பெரிதும் ஈடுபட்டு, அர்ச்சாவதாரத்தையும் அங்கங்கே தொட்டுக்காட்டிச் சென்றனர். திருமழிசையாழ்வாரோ, 'இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்' என்று எல்லாத் தேவதைகளுக்கும் ஆதி தேவன் திருமாலே என்று தலைக்கட்டுகிறார். பாண்பெருமாளோ, 'அரங்கத்து அம்மானைக் கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே' என்று அர்ச்சா வடிவில் அரவணைத் துயிலும் பெரிய பெருமாளின் திருவடி தொடக்கமாகத் திருமுடி அளவும் செவ்விதாக நோக்கி, எம் பெருமானுடைய திவ்ய சௌந்தரியத்திலே ஈடுபட்டுப் பாடுகின்றார்.

பாணர் குலத்திலே பிறந்தமையால் திருவரங்கத்து எம்பெருமான் பக்கல் நெருங்கும் வாய்ப்பு இன்றிக் காவிரிக் கரையில் நின்றபடியே எம்பெருமான் சந்நிதி நோக்கிப் பாடிப் பக்தி பரவசராய் வாழ்ந்தவர் இவ்வாழ்வார். இவருடைய பக்தி வலையில் பட்ட பரமனின் கட்டளைப்படி லோகசாரங்க முனிவரின் திருத்தோள் மேலே ஏறிப், பெரிய பெருபெருமாளின் திருமுன் சென்று, பாட்டிசைத்துப் பரவினார் இவர் என்பது சரித்திரம். பெரிய பெருமாள் காட்சி தந்தருளிய வண்ணம் பாணர் எம்பெருமானுடைய பாதம், ஆடை, உந்தி, உதரபந்தம், மார்பு, கழுத்து, வாய், கண்கள் என்று இவ்வாறு ஒவ்வோர் அவயவத்தின் அழகையும் அநுபவித்து, பின்னர் திருமேனியின் காந்தியையும் ஒரு சேரக் கண்டு ஆனந்திக்கிறார். இவர் எம்பெருமானை எவ்வாறு அனுபவித்தார் என்பதைத் திருமலை நம்பி என்பார் பாணரைக் குறித்துப் பாடிய பாடல் நன்கு தெரிவிக்கிறது.

**காட்டவே கண்ட பாத கமலம், நல் ஆடை, உந்தி,**
**தேட்டரும் உதரபந்தம், திருமார்வு, கண்டம், செவ்வாய்,**
**வாட்டம் இல் கண்கள், மேனி-முனி ஏறித் தனி புகுந்து-**
**பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே.**

(பாத கமலம் - திருவடித் தாமரை. உந்தி - கொப்பூழ். தேட்டரும் - கிடைத்தற்கு அருமையான. உதரபந்தம் - அரைஞாண். வாட்டம் - சோர்வு. முனி - லோகசாரங்க முனி.)

தமது கையில் கொண்ட வீணையின் நாதத்தை எழுப்பி, இனிய இசைப் பாட்டினாலே திருவரங்கத்துப் பெருமானைப் பரவிய பாணாழ்வாரின் திருவடிகளைத் துதிக்கின்றார் திருமலை நம்பி.

## 'அமலனாதிபிரான்'

திவ்யப் பிரபந்தத்தில் பாண்பெருமாள் பாடிய பாசுரங்கள் பத்தையும் 'அமலனாதிபிரான்' என்று அழைப்பர். 'அமலன், 'ஆதி பிரான்' என்று இவருடைய பாசுரம் தொடங்குகிறது. நான்முகன் 'திருவந்தாதி', 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என முதற் குறிப்பினால் பெயர் பெற்ற பிரபந்தங்களைப் போன்று இதுவும் முதற் குறிப்பினால் பெற்ற பெயர். பாதாதி கேசமாக எம்பெருமானது மெய்ப்புகழை வாயாரப் பாடித் துதிக்கின்றார். பாடல்களிலே முற்பகுதியில் எம்பெருமானுடைய ஏற்றமும், இடையே திருவரங்கத்தின் எழிலும், இறுதியில் பெருமானது அவயவங்களும் சிறப்பிக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

## அரங்கத்து அம்மான் திருப்புகழ்

அரங்கத்து அம்மானைத் தெய்வநலம் கமழும் திருப் பெயர்களால் அழைத்து ஆனந்திக்கிறார் ஆழ்வார். அமலன், ஆதிபிரான், விமலன், விண்ணவர்கோன், வேங்கடவன், நிமலன், நின்மலன், நீதிவானவன், அரங்கத்து அம்மான், நீள்முடியன், காகுத்தன், அரவின் அணையான், ஓத வண்ணன், அனலாழியார், ஐயனார், மாயனார், கொண்டல் வண்ணன், கோவலன், அண்டர்கோன், அரங்கன் என்றெல்லாம் எம்பெருமானைச் சுட்டுகின்றார். மேலும், அவனது திருவிளையாடல்களைப் பேசி மகிழ்கின்றார்.

உலகத்தை அளந்து அண்டகோளத்திற்கு அப்பாலும் நிமிர்ந்த நீண்ட திருவடிவினனாய் நின்ற திரிவிக்கிரமாவதாரம், அரக்கரையும் அரக்கரின் அரசனாகிய இலங்கை மன்னன் இராவணனையும் கொடிய அம்பினால் மடிவிக்கக் காகுத்தனாய் வந்த இராமாவதாரம், தானே பெரு வலியன் எனச் செருக்குக் கொண்டு எதிர்த்த இரணியனின் உடலைப் பிளந்த நரசிங்காவதாரம், கோவலனாய் வந்து வெண்ணெய் உண்ட கிருஷ்ணாவதாரம் ஆகிய அவதார நிகழ்ச்சிகளையும் சுட்டியுள்ளார். சிவ பெருமானின் துயர் தீர்த்தது, உலகம் ஏழையும் உண்டு ஆலமரத்தின் இலைமேலே ஒரு பாலகனாய்க் கிடந்தது ஆகிய நிகழ்ச்சிகளையும் குறித்துள்ளார்.

நறுமணம் கமழ்வதும் மந்தி பாய்வதுமாகிய பொழில் சூழ்ந்த வேங்கட மலையில் வானவர்கள் வணங்க நிற்கும் திருக்கோலத்தை இரு பாடல்களிலே பாடியுள்ளார். மேலும், இறைவன் தம்மை அடியார்க்கு அடியனாகச் செய்தான் என்றும், மிகப் பாரமாகச் சுமந்துள்ள தமது பழவினைகளின் பற்றை அறுத்தான் என்றும் ஆண்டவன் தமக்குச் செய்த அருளையும் பேசுகின்றார்.

திருவரங்கத் திருநகரம் நீண்டு உயர்ந்த மதில்களால் சூழப் பெற்றது என்றும், நறுமணம் கமழும் சோலைகளை உடையது என்றும், அவற்றில் இனிமையாக வண்டுகள் பாட மயில்கள் ஆடிக்கொண்டிருக்கும் என்றும் அந்நகரின் அழகிய தோற்றத்தை வருணிக்கிறார். இந் நகரிலே அரவின் அணைமேல் அறிதுயில் கொள்ளும் அப்பனைப் பாதாதி கேசமாகப் பார்த்து, அவனுடைய பேரழகிலே ஒன்றிவிடுகிறார்.

இனி, பாண்பெருமாள் காட்டியபடி திருவரங்கப் பெருமானின் பேரழகைத் திருவடி தொடங்கித் திருமுடி அளவாகப் பார்ப்போம்.

## கமல பாதம்

**அமலன், ஆதிபிரான்,**
**அடியார்க்கு என்னை ஆட்படுத்த**
**விமலன், விண்ணவர் கோன்,**
**விரை ஆர் பொழில் வேங்கடவன்,**
**நிமலன், நின்மலன், நீதி வானவன்,**
**நீள் மதில் அரங்கத்து அம்மான், திருக்**
**கமல பாதம் வந்து, என்**
**கண்ணின் உள்ளன ஒக்கின்றதே.**

(அமலன் - பரிசுத்தன் ஆட்படுத்த - அடிமை ஆக்கிய. விரை - நறுமணம், பொழில் - சோலை. கமல பாதம் - தாமரை போன்ற திருவடிகள்.) 1

## சிவந்த ஆடை

**உவந்த உள்ளத்தனாய்**
**உலகம் அளந்து அண்டம் உற**
**நிவந்த நீள் முடியன், அன்று,**
**நேர்ந்த நிசாசரரைக்**

**கவர்ந்த வெங்கணைக் காகுத்தன், கடி**
**ஆர் பொழில் அரங்கத்து அம்மான், அரைச்**
**சிவந்த ஆடையின் மேல்**
**சென்றது ஆம், என் சிந்தனையே!**

(நிவந்த - உயர்ந்த. நிசாசரர் - அரக்கர். காகுத்தன் - ககுத்ஸ்த குலத்தில் உதித்த இராமன். கடி ஆர் பொழில் - பரிமளம் மிக்க சோலை. சிவந்த ஆடை பீதாம்பரம். என் சிந்தனை - என்னுடைய நினைவு.)

**உந்தி**

**மந்தி பாய் வட வேங்கட**
**மாமலை வானவர்கள்**
**சந்தி செய்ய நின்றான்,**
**அரங்கத்து அரவின் அணையான்,**
**அந்தி போல் நிறத்து ஆடையும் அதன்-**
**மேல் அயனைப் படைத்தது ஓர் எழில்**
**உந்தி மேலது அன்றோ;**
**அடியேன் உள்ளத்து இன்னுயிரே.**

(மந்தி-குரங்கு. சந்தி செய்ய - சந்தியா காலங்களிலே ஆராதிக்க. அயன் -பிரமன். எழில் - அழகு. உந்தி - கொப்பூழ்.)

**உதரபந்தம்**

**சதுர மா மதில் சூழ் இலங்கைக்கு**
**இறைவன் தலை பத்து**
**உதிர ஓட்டி ஓர் வெங் கணை**
**உய்த்தவன், ஓத வண்ணன்,**
**மதுரமா வண்டு பாட மா மயில்**
**ஆடு அரங்கத்து அம்மான் திருவயிற்று**
**உதரபந்தம் என் உள்ளத்துள்**
**நின்று உலாகின்றதே.**

(சதுர மா மதில் - சதுர வடிவாய் உயர்ந்துள்ள மதில். கணை - அம்பு. ஓதவண்ணன் - கடல் போன்ற நிறமுடையான். மதுரமா - இனிமையாக. உதர பந்தம் - அரைஞாண். உலாகின்றது - சஞ்சரிக்கின்றது.)

**மார்பு**

**பாரம் ஆய பழ வினை**
**பற்று அறுத்து, என்னைத் தன்**
**வாரம் ஆக்கி வைத்தான்;**
**வைத்தது அன்றி என் உள் புகுந்தான்;**
**கோர மா தவம் செய்தனன்கொல்?**
**அறியேன்! அரங்கத்து அம்மான் திரு**
**ஆர மார்வு அது, அன்றோ !**
**அடியேனை ஆட்கொண்டதே!**

(வாரம் - அன்பு கோர மாதவம் - கடுந்தவம். ஆரம் - முத்து மாலை மார்வு - மார்பு.)

**கழுத்து**

**துண்ட வெண் பிறையன்**
**துயர் தீர்த்தவன், அஞ்சிறைய**
**வண்டு வாழ் பொழில் சூழ்**
**அரங்க நகர் மேய அப்பன்,**
**அண்டர் அண்ட பகிரண்டத்து ஒரு**
**மா நிலம் எழு மால் வரை முற்றும்**
**உண்ட கண்டம் கண்டீர்,**
**அடியேனை உயக் கொண்டதே!**

(துண்ட வெண் பிறையன் - சிறு கீற்றுப் போன்ற வெண்மையான பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமான். அஞ்சிறைய - அழகிய சிறகுகளை உடைய. வரை - மலை. கண்டம் - கழுத்து.) (6)

## வாய்

**கையின் ஆர் சுரி சங்கு**
**அனல் அழியார், நீள் வரை போல்**
**மெய்யனார், துளப விரை ஆர்**
**கமழ் நீள் முடி எம்**
**ஐயனார், அணி அரங்கனார், அர-**
**வின் அணைமிசை மேய மாயனார்,**
**செய்ய வாய். ஐயோ ! என்னைச்**
**சிந்தை கவர்ந்ததுவே.**

(சுரி சங்கு - துளையையுடைய சங்கு. ஆழியார் - சக்கராயுதத்தையுடையவர். துளபம் - துளசி மாலை. ஐயனார் - தந்தையார். செய்ய வாய் - சிவந்த வாய்.) (7)

## கண்கள்

**பரியன் ஆகி வந்த அவுணன்**
**உடல் கீண்ட அமர்க்கு**
**அரிய ஆதிப் பிரான்**
**அரங்கத்து அமலன் முகத்துக்**
**கரிய ஆகிப் புடை பரந்து**
**மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப்**
**பெரிய ஆய கண்கள், என்னைப்**
**பேதைமை செய்தனவே!**

(பரியன் - பருத்த உடம்பு உடையவன். அவுணன் - அசுரனான இரணியன். செவ்வரி - சிவந்த ரேகை. பேதைமை செய்தன - வேறொன்றையும் அறியாதபடி தன் பக்கலிலே இழுத்துக்கொண்டன. (8)

## நீலமேனி

**ஆலமா மரத்தின் இலை**
**மேல் ஒரு பாலகனாய்**
**ஞாலம் ஏழும் உண்டான்**
**அரங்கத்து அரவின் அணையான்**
**கோல மா மணி ஆரமும் முத்துத்**
**தாமமும் முடிவு இல்லது ஓர் எழில்**
**நீல மேனி, ஐயோ!**
**நிறை கொண்டது, என் நெஞ்சினையே!**

(பாலகன் - குழந்தை. ஞாலம் - பூமி. ஆரம் - மலர் மாலை. முத்துத் தாமம்- முத்து மாலை. நிறை கொண்டது - அடக்கத்தை அழித்தது.) (9)

## அரங்கனைக் கண்ட கண்கள்

**கொண்டல் வண்ணனைக்**
**கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன் என்**
**உள்ளம் கவர்ந்தானை**
**அண்டர் கோன் அணி**
**அரங்கன் என் அமுதினைக்**
**கண்ட கண்கள் மற்று**
**ஒன்றினைக் காணாவே.**

(கொண்டல் வண்ணன் - மேகம் போல நிறமுடையவன். கோவலன்-இடையன். அண்டர் கோன் - தேவர்கள் தலைவன்.) (10)

தமது ஐம்புலன்களையும் ஒருவழிப்படுத்தி, சிந்தையும் செயலும் அவன் பக்கலிலே ' செல்ல, அரங்கத்து அப்பனின் திருமேனி அழகு ஆழ்வாருடைய சிந்தையைக் கவர்ந்து கொண்டபின் அவரால் என்ன செய்ய முடியும்? அப்பெருமானைக் கண்ட கண்களால் வேறொன்றை நோக்கத்தான் முடியுமோ? அரங்கத்து அமுதனையே அநுபவித்துப் பேரானந்தம் பெறுகிறார் பாண்பெருமாள். இத்தகைய பெருநிலையை ஓரளவேனும் பக்தர்கள் அணுகுவதற்கு இவ்வாழ்வாரின் அருள்வாக்கு துணை செய்வதாக.

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -19

*பி. ஆர். கண்ணன்*

**ஸ்கந்தம் 9**

**பஞ்ச ப்ரக்ருதி**



இந்த உபதேசத்தை நாராயணரிஷி நாரதருக்கு அவராகவே ஆரம்பித்து சொன்னார். சக்தியை ப்ரக்ருதி என்றும் கூறுவர். அதாவது, விசேஷமான காரியம் என்று பொருள் படுகிற ப்ரக்ருதி என்ற சொல், இங்கு ஸ்ருஷ்டி என்கிற விசேஷ காரியத்தைச் செய்பவளைக் குறிக்கிறது. ப்ரக்ருதி முக்கியமாக ஐந்து சக்திகளாகச் செயல்படுகிறாள். **கணேஸஜநநீ துர்கா ராதா லக்ஷ்மீ ஸரஸ்வதீ ந ஸாவித்ரீ ச ஸ்ருஷ்டிவிதௌ ப்ரக்ருதி பஞ்சதா ஸ்ம்ருதா ।।** கணபதியின் தாயான துர்க்கை, ராதா, லக்ஷ்மி, ஸரஸ்வதி, ஸாவித்ரி என்ற ஐந்து சக்திகள்.

ஆதிபராசக்தி பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை தோற்றுவித்து, அவர்களுக்கு தன் அம்சங்களான சக்திகளாக மகாஸரஸ்வதி, மகாலக்ஷ்மி, மகாகாளி ஆகியோரை அவர்களுக்கு அனுக்ரகித்து ஸ்ருஷ்டி காரியத்தில் ஈடுபடுத்திய விவரங்களை நாம் முன்னரே பார்த்தோம். அம்பாளின் லீலைகள் கணக்கிலடங்கா. வேறொரு கல்பத்தில் அம்பாள் ஸ்ருஷ்டியின் முறையை மாற்றி, தன்னையே வலது பக்கத்தில் கிருஷ்ணராகிய புருஷனாகவும், இடது பக்கத்தில் ராதாவாகிய ஸ்திரீயாகவும் இரண்டாகப் பிரித்து, அவர்கள் மூலம் ஸ்ருஷ்டிக்ரமத்தை நிகழ்த்திய விவரத்தை நாம் இப்போது வ்யாஸரிடமிருந்து அறிகிறோம். கிருஷ்ணரைப்பற்றி: **க்ருஷிஸ்தத்பக்திவசநோ நஸ்ச தத்தாஸ்யவாசகஃ ந பக்திதாஸ்யப்ரதாதா ய: ஸ ச க்ருஷ்ண: ப்ரகீர்தித: ।।** அதாவது, 'க்ருஷி' என்பது அம்பாளிடம் பக்தியையும், 'ந' என்பது அந்த பக்தியை வழங்குபவரையும் குறிக்கிறது. அதேபோல, **க்ருஷிஸ்ச ஸர்வவசநோ நகாரோ பீஜமேவ ச ந ஸ க்ருஷ்ண: ஸர்வஸ்ரஷ்டாதௌ ஸிஸ்ருக்ஷுந்நேக ஏவ ச ।।** 'க்ருஷி' என்பது ஸர்வத்தையும், 'ந' என்பது பீஜத்தையும் குறிக்கும். அதாவது, எல்லா ஸ்ருஷ்டிக்கும் ஆதியாக கிருஷ்ணரை ராதையுடன் ஆதிபராசக்தி நியமனம் செய்து, அவர் மூலம் ஸ்ருஷ்டித் தொழில் நடந்தது. கிருஷ்ணரின் இடது பாகத்திலிருந்து

ஒருசமயம் சிவனும், வேறொரு சமயம் விஷ்ணுவும், விஷ்ணுவின் நாபிகமலத்திலிருந்து பிரம்மாவும் தோன்றினர். ராதையின் இடதுபாகத்திலிருந்து லக்ஷ்மி தோன்றினாள்.

**ராதாதேவி**

ராதாதேவி கிருஷ்ணரின் பிராணனை வைத்திருக்கும் தேவி என்றும், ராதையின் ஷடாக்ஷர மந்திரம், ராதையே கிருஷ்ணருக்கு உபதேசித்த 'வாஞ்சா சிந்தாமணி மந்திரம்', ராதா ஸ்தோத்திரம், ராதா ஸஹஸ்ரநாமத்தின் விசேஷம், கார்த்திகை பௌர்ணிமையின் விசேஷம் எல்லாம் இங்கு கிடைக்கிறது. ராதையை அர்ச்சனை செய்யாமல் கிருஷ்ணரை அர்ச்சிக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. ராத்நாதி ஸகலாந் காமாந் தஸ்மாத் ராதேதி கீர்த்திதா । 'எல்லா காமனைகளையும் பூர்த்தி செய்கிறவளாதலால், ராதை எனப்படுகிறாள்.' ராதை தன் சரீரத்திலிருந்து கோபிகளையும், கிருஷ்ணர் அவ்வாறே கோபர்களையும் தோற்றுவித்தார்கள்.

ஒரு சமயம் ராதை கிருஷ்ணருடன் வாக்குவாதம் செய்கையில், 'நீ விரஜை என்கிற கோபியுடன் நெருக்கமாக இருந்தாய். நான் உள்ளே நுழைந்தவுடன் அவள் வெட்கத்துடன் விலகி, அவள் தேஜஸ் விரஜா நதியாகவும், அவள் சரீரம் ஏழு சமுத்திரங்களாகவும் ஆகின. நீ சோபா என்கிற கோபியுடன் இருந்தபோது நான் வந்து, அவள் சந்திரமண்டலம் சென்றாள்; அவள் சரீரத்தேஜஸை ரத்னங்கள், புஷ்பங்கள், பழங்களுக்குக் கொடுத்தாய். இவ்வாறே, ப்ரபா என்ற கோபி சூரியமண்டலம் சென்றாள்; அவள் தேஜஸை அக்னி, முனிவர்களுக்குக் கொடுத்தாய். சாந்தி என்ற கோபி உன்னிடமே ஐக்கியமானாள்; அவள் தேஜஸை ராதா, பிரம்மா, லக்ஷ்மி, பக்தர்களுக்குக் கொடுத்தாய். க்ஷமை என்கிற கோபி பூமிக்கு லஜ்ஜையாக ஆனாள்; அவள் தேஜஸ் விஷ்ணு, தபஸ்விகள் ஆகியோரை அடைந்தது. என்றாள். இதிலிருந்து, கிருஷ்ணரின், ராதையின் சக்திகளே உலகிலுள்ள எல்லா தேஜஸ்களாக - சூரியன், சந்திரன், வைகுண்டத்திலுள்ள விரஜா நதி, க்ஷமை, சாந்தி போன்ற ஸத்குணங்கள் இவ்வாறு எல்லாமாக - பரிணமித்துள்ளதை நமக்கு மிக அழகாகத் தெரிவிக்கிறார் வ்யாஸர்.

**துர்க்கா**

துர்க்கா தேவி கிருஷ்ணரின் புத்திசக்தியாக அவர் எதிரில் தோன்றினாள். **துர்கஸங்கடஹந்த்ரீதி துர்கேதி ப்ரதிதா புவி ।** துர்க்கை தாண்டவே முடியாத துன்பங்களையும் தாண்டுவிப்பவள். எல்லா உலகிற்கும் சக்தியைக் கொடுப்பவள். இகலோக சுகம், பரலோக மோக்ஷம் எல்லாவற்றையும் அருள்பவள். மூலமந்த்ரம்

நவாக்ஷரி. இந்த மந்த்ர ரிஷிகள் பிரம்மா, விஷ்ணு, சிவன். பூஜாமுறைகளை விளக்கி, துர்க்காயந்திரத்தில் ஆவாகனம் செய்தல், விஸ்தாரமாக சக்திகளுக்குப் பூஜை, துர்க்கா ஸப்தசதி பாராயணப் பெருமை, மகாகாளி, மகாலக்ஷ்மி, மகாஸரஸ்வதியின் விசேஷ த்யான ஸ்லோகங்கள் எல்லாம் இங்கு தரப்பட்டுள்ளன. விஷ்ணு, பிரம்மா, லக்ஷ்மி முதலான தேவிகள், தேவர்கள், மனுக்கள், முனிவர்கள், ஞானிகள், யோகிகள் ஆகிய எல்லோருமே துர்க்கையை எப்போதும் த்யானித்தே நற்பலனை அடைகின்றனர்.

## ஸரஸ்வதிதேவி

ராதையின் முகத்திலிருந்து மாக-சுக்ல-பஞ்சமியன்று ஸரஸ்வதியின் ஆவிர்பாவம். கிருஷ்ணர், பிரம்மா, விஷ்ணு, சிவன் எல்லோரும் ஸ்துதி செய்தனர். நாராயணரிஷி வால்மீகிக்கு உபதேசித்த ஸரஸ்வதி மூலமந்திரத்தை வால்மீகி 4 லக்ஷம் தடவை ஜபம் செய்து, மந்திரஸித்தி பெற்றார். விஸ்வஜயம் என்று பெயர் பெற்ற ஸரஸ்வதி கவசத்தை இப்போது நாராயணரிஷி நாரதருக்கு அருளினார். ஸரஸ்வதிதேவியின் கதையையும் கூறினார்.

குருவாகிய வைசம்பாயனரிடம் ஒரு சமயம் அபசாரப்பட்ட யாக்ஞவல்க்யர், குருவின் ஆணைப்படி தான் கற்ற கிருஷ்ண யஜுர்வேதம் முழுவதையும் வாந்தியாகக் கக்கினார். மற்ற சிஷ்யர்கள் 'தித்திரி' என்ற குருவிகளாக மாறி, அந்த வேதத்தை கிரகித்தனர். அதனால் இப்போதும் அந்த வேத சாகை 'தைத்திரீயம்' என்று வழங்குகிறது. வேதஞானத்தை இழந்த யாக்ஞவல்க்யர் சூரியனை உபாஸித்து, புதியதான 'சுக்ல யஜுர்வேத'த்தை அவரிடமிருந்து கற்றுணர்ந்தார். சூரியன் சொற்படி அவர் ஸரஸ்வதியை உபாஸித்து, தான் கற்ற புதிய வேதசாகையை தக்கவைத்துக் கொண்டார்.

சிவன் இந்த்ரனுக்கு ஞானோபதேசம் செய்து ஸரஸ்வதி தேவியின் பூஜாமுறையை உபதேசித்தார். வ்யாஸர் வேதவிபாகம் செய்தது, பிரம்மஸூத்ரங்கள், மகாபாரதம், புராணங்கள் எல்லாம் எழுதியது ஸரஸ்வதியை பூஜித்துப் பெற்ற கிருபையினால்தான்.

## பூமிதேவி

வராஹஸ்வாமி ஹிரண்யாக்ஷனை வதம் செய்து பூமியை நிலைநிறுத்தியபின், விஷ்ணு பூமிதேவியை ஸ்தோத்திரம் செய்தார். நாராயணரிஷி நாரதருக்கு பூமிதேவியின் மூலமந்த்ரம், ஸ்தோத்திரம் எல்லாம் உபதேசித்தார். பூமிதானத்தின் புண்ணியம், பூமியை அபகரிப்பதன் பாபம் ஆகியவற்றை விளக்கிவிட்டு, பூமியின்மீது நேராக தீபம், சிவலிங்கம், ஸாலக்ராமம், சங்கு, புஷ்பம் இவற்றை வைப்பதன் பாபத்தையும் அறிவுறுத்தினார்.

## கங்கை

கங்கையின் உத்பத்திபற்றிய புதிய கதையை தேவி பாகவதம் நமக்கு அளிக்கிறது. கிருஷ்ணர் கோலோகத்தில் ஒரு கார்த்திகை பௌர்ணமியன்று ராதையைப் பூஜித்து ராஸமண்டலத்தில் இருந்தார். ஸரஸ்வதி கிருஷ்ணகானம், வீணாவாதனம் செய்தாள். எல்லோரும் அவளுக்குப் பரிசுகள் கொடுத்தனர். அப்போது பிரம்மாவின் பிரார்த்தனையின் பேரில், சிவன் கிருஷ்ணஸங்கீதம் செய்யவே, கிருஷ்ணரும், ராதையும் காணாமல் போயினர். எல்லோரும் அழுது கிருஷ்ணர், ராதாவைப் பிரார்த்தித்தனர். அப்போது அசரீரி கேட்டது. கிருஷ்ணரும், ராதையும் சிவனுடைய உருக்கமான ஸங்கீதத்தினால் உருகி திரவமாக ஆகிவிட்டனர். அதுவே கங்கையாகும். கிருஷ்ணர் அசரீரியில் சிவனிடம் வேதாந்த சாஸ்திரங்களை மந்திரங்களுடன் செய்யுமாறு கோரி, சிவன் ஒப்புக்கொண்டபிறகு, அவர்களிருவரும் பழையபடி காட்சி கொடுத்தனர். சிவன் அவ்வாறே 'முக்திதீபம்' என்கிற சாஸ்திரத்தினைச் செய்தார்.

பகீரதன் கங்கைக்குத் தியானம், பூஜை, ஸ்தோத்திரம் செய்ததைக் கூறுமுகமாக, இங்கு அவை நமக்குக் கிடைக்கின்றன. ஸ்தோத்திரத்தில் **ஸிவஸங்கீதஸம்முக்த ஸ்ரீக்ருஷ்ணாங்கஸமுத்பவாம் । ராதாங்கத்ரவஸம்யுக்தாம் தாம் கங்காம் ப்ரணமாம்யஹம் ॥** என்று கங்கையின் உத்பத்தியின் விவரத்தை அளிக்கிறார். தேவி பாகவதத்தில் கங்கை பலலோகங்களிலும் பாய்வதைச் சொல்லி, ஆங்காங்கு நதியின் நீள அகலங்களைக் குறிப்பிட்டு, பூமியில் அலகநந்தாவாக, ஸத்யயுகத்தில் பால்வர்ணமாகவும், த்ரேதாயுகத்தில் சந்திரவர்ணமாகவும், த்வாபரத்தில் சந்தனநிறமாகவும், கலியில் ஜலமாகவும் இருப்பதைச் சொல்கிறது. பகீரதன் கங்காஜலத்தினால் பூர்வஜர்களைக் கரையேற்றினதைச் சொல்லி, கங்காஸ்னான புண்ணியத்தை வெகுவாக விவரிக்கிறது. **யத்தோயகணிகாஸ்பர்ஸே பாபிநாம் ஜ்ஞாநஸம்பவ: । ப்ரஹ்மஹத்யாதிகம் பாபம் கோடிஜந்மார்ஜிதம் தஹேத் ॥** 'கங்கையின் ஒருதுளி ஸ்பரிசமே, பாபிகளுக்குக்கூட ஞானத்தை அருள்வது; கோடி ஜன்மங்களில் சேர்த்த பிரம்மஹத்தி முதலிய தோஷங்களை எரித்து விடுகிறது.'

## துளஸிதேவி

கோலோகத்தில் கோபியாக இருந்தவள், ஒருசமயம் ராதையினால் சபிக்கப்பட்டு பூமியில் ராஜா தர்மத்வஜனுக்கும், ராணி மாதவிக்கும் புத்ரியாகப் பிறந்தாள். அவளுடைய அழகுக்கு சமானமானவர் யாருமில்லாததால், துளஸி என்று பெயர் வைத்தனர். விஷ்ணுவை பதியாக அடைய அவள் பதரியில் லக்ஷ திவ்ய வருஷம் தபஸ் செய்தாள். பிரம்மா தரிசனம் தந்து, ஷோடசாக்ஷர ராதிகா மந்த்ரத்தை உபதேசித்து, 'சுதாமா என்கிற கோபன் சாபவசத்தினால் சங்கசூடன் என்ற தனவனாக இப்போது

*பிறந்துள்ளான்; அவனுடைய பத்னியாக இருந்து, பின்னால் விஷ்ணுவை அடைவாய்' என்று அனுக்ரகித்தார். துளஸி ராதாவின் பூஜை, ஸ்தோத்திரம், கவசம் மற்ற மந்த்ரஜபம் எல்லாம் செய்தாள்.*

*தானவனான சங்கசூடன் கிருஷ்ணமந்த்ர ஜபம் செய்து மகாயோகியானான். பிரம்மதேவரின் ஆக்ஞையினால் பதரி வந்து துளஸியுடன் வாதிட்டு, பின்னர் விவாகம் செய்துகொண்டான். இந்தகாலகட்டத்தில், தானவர்களால் துன்பம் தாங்காத தேவர்களின் பிரார்த்தனைக்கிணங்க, விஷ்ணு, சங்கசூடனை சிவன் வதம் செய்யத் திட்டமிட்டு, அதன்படி, சிவன் சங்கசூடனை அழைத்து வேதாந்த உபதேசம் செய்து, தேவதைகளுக்கு ஸ்வர்க்கத்தைத் திருப்பித் தருமாறு கூறினார். அவன் மறுக்கவே, சிவனுக்கும் தானவர்களுக்கும் கடும் யுத்தம் நிகழ்ந்தது. சிவனுக்கும் சங்கசூடனுக்குமே யுத்தம் 100 வருஷம் நடந்தது. சங்கசூடனின் கழுத்தில் இருந்த விஷ்ணுவின் மந்திரகவசமும், அவன் பத்னி துளஸியின் பாதிவ்ரத்யமுமே அவனைக் காத்த காரணத்தினால், விஷ்ணு கிழ அந்தணராக வந்து, கவசத்தை பிக்ஷயாகப் பெற்றார். விஷ்ணு துளஸியிடம் சங்கசூடன் வேஷத்துடன் கவசத்துடன் போகவே, துளஸி மயங்கினாள். அச்சமயத்தில் சிவன் த்ரிசூலத்தினால் சங்கசூடனை பஸ்மமாக்கினார். உடனே சங்கசூடன் கோபனாக மாறி விமானத்தில் கோலோகம் சென்றான்.*


*துளஸிக்கு விஷ்ணு தன்னை ஏமாற்றியது தெரியவரவே, கோபத்தினால் சபித்தாள்: 'கல்நெஞ்சம் கொண்ட நீ, கல்லாகக்கடவாய்' என்று. விஷ்ணு அதுதான் தன்னுடைய திட்டம் என்று சொல்லி, 'நான் கண்டகி நதிதீரத்தில் உன் சாபப்படி மலையாக இருப்பேன். நீ இப்போது விஷ்ணுலோகம், கோலோகம் செல்வாய். உன் சரீரமே கண்டகி நதியாகவும், உன் கேசமே துளஸி மரமாகவும் பூமியில் பிரசித்தமாக இருந்து மங்களங்களை அருளும்' என்றார். விஷ்ணுவின் வாக்குப்படி சாலக்கிராமக்கற்கள் இன்றும் கண்டகி நதியில் கிடைக்கின்றன. 1 த்வாரமும் 4 சக்ரமும் வனமாலையும் இருக்கும் கல் லக்ஷ்மிநாராயணர் எனப்படும். இவ்வாறாக பலவகை சாளக்கிராமங்கள் உண்டு. சாளக்கிராமம், துளஸி, சங்கம் இவற்றை ரக்ஷிப்பவன் விஷ்ணுவிற்கு மிகப்பிரியமானவன்.* **துலஸீதோயகணிகாம் ம்ருத்யுகாலே ச யோ லபேத் । ரத்நயாநம் ஸமாருஹ்ய வைகுண்டம் ப்ராப்யதே த்ருவம் ॥** *'மரணகாலத்தில் சிறுதுளி துளஸிஜலம் பருகுபவன் ரத்னமயமான விமானத்தில் வைகுண்டத்தை நிச்சயம் அடைவான்.*

*(வளரும்)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**விஸ்வனாத ஐயர் கணபதி - கோ**

நான் நாகப்பட்டினத்தில் இருந்தேன். அப்போது பெரியவா அங்கு வரும்போது தீர்த்தப்ப்ரசாதம் வாங்கி இருக்கிறேன். ரொம்ப பழக்கமில்லை அவ்வப்போது நான் இருக்கும் பக்கம் அவர் வர நேர்ந்தால் ஓரமாக இருந்து தர்சனம் செய்வது வழக்கம். அவரை நேரில் சந்திக்க ஆசையிருப்பினும் சந்தர்ப்பம் வரவில்லை.



நான் எதிர் பார்த்த சந்தர்ப்பம் வந்தது. பெரியவாளும் புதுப் பெரியவாளும் அப்போது திருப்பதியில் முகாமிட்டிருந்தார்கள். நான் அங்கு சென்றிருந்தேன். நிரம்பக் கூட்டம். புதுப்பெரியவா இப்போது பெரியவாளைப் பார்க்க முடியாது.

வெங்கடாசலபதியை தர்சனம் செய்துவிட்டு வாருங்கள் என்றார். எனக்கு போக மனமில்லை. அங்கேயே நின்றிருந்தேன். புதுப்பெரியவா என்னைக் கூப்பிட்டு என்ன உன் மருந்தெல்லாம் நல்ல மருந்து என்கிறார்களா? என்று வினவினார். உள்ளபடி நல்ல மருந்துகள்தான். நானும்

மக்களுக்குப் போய் சேர வேண்டும் என்று கூற அப்போது பெரியவா உள்ளேயிருந்து வெளியே வந்தார். எனக்குத் தர்சன்ம் தந்தார். மட்டற்ற மகிழ்ச்சியோடு அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டேன்.

பெரியவாளுக்கு பிக்ஷை செய்ய ஆசை கொண்டிருந்தேன். அதற்கு உரிய நாளும் வந்தது. அதில் ஒரு சிக்கல் இருந்தது. நான் குடுமி வைத்திருக்கவில்லை. ஆதலால் பிக்ஷை கொடுக்க அதிகாரமில்லை. எனவே மடத்தில் இருந்த கல்யாண சுந்தரமையருடன் சேர்ந்து பிக்ஷை செய்தேன். பிக்ஷை முடிந்து பெரியவாளை நமஸ்கரிக்கும் போது பெரியவா '' நீ எவ்வளவு கொடுத்த? சுந்தரம் எவ்வளவு கொடுத்தார்?' என்று கேட்டார். நானும் நான் 5000மும் அவர் 10ம் தந்தோம் என்றேன். பெரியவா சற்று காட்டமாகவே ''ஏன் ரூபாய் 10 க்கு க்ராப் குடுமியாகிவிட்டதா? என்றார். நான் வெலவெலத்துப் போனேன். நான் நடுங்குவதைப் பார்த்து பெரியவா உன் பிக்ஷையை ஏற்றுக் கொண்டேன்'' என்று கூறினார் .

அதன்பின் இதற்காகவே குடுமி வைத்துக் கொண்டேன். இதைப்பார்த்து ஒரு தரம் பெரியவா '' ஏய் நான் ரொம்ப கோச்சிண்டனோ'' என்று வினவ நான் அப்படி நீங்கள் சொல்லவில்லையெனில் சிகை வைத்துக் கொண்டிருக்க மாட்டேன் என்றேன். பெரியவாளும் புன்முறுவலுடன் ஆசீர்வாதித்தார்.

அதன் பின் பல சமயம் அவரைப் பார்க்க போய் வருவது வழக்கம். அப்போது மடத்தில் யானை இல்லை. ஒன்று வாங்கிக் கொடுக்க நினைத்தேன். புதுப் பெரியவாளைக் கேட்க பெரியவா சொல்றபடி செய் என்றார். நான் மகா பெரியவாளைக் கேட்க அவர் ஒன்றும் சொல்லவில்லை. இருப்பினும் ஓர் யானையை வாங்கிக்கொடுத்தேன். பெரியவாளுக்கு மிக்க மகிழ்ச்சி. என்னை ஆசீர்வாதம் செய்தார்.

(தொடரும்)

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

ராஜ ரீக சதியிலும் நல்லது நடக்க வேண்டுமென்றால் நிச்சயம் நடக்குமென்றார் பௌராணிகர். அதென்ன என்று சிஷ்யன் வினவ அவர் கூறலானார். கோசலை நாட்டை த்ருவஸந்தி என்பவன் ஆண்டு வந்தான். சாத்திரங்கள் படித்தவன். மக்கள் மேல் அன்பு வைத்து ந்யாயமான முறையில் ஆண்டு வந்தான். அவனுக்கு இரு மனைவிகள் . மூத்த மனைவி மனோரமா, அவளுடைய புதல்வன் சுதர்சனன். இளையாள் லீலாவதி, அவளுடைய புதல்வன் சத்ருஜிதன். அரசன் இரு மனைவிகளிடமும் எந்த பார பக்ஷமும் காட்டாமல் அன்போடு இருந்தான். மக்களையயும் நல்லவிதமாக நடத்தி அரசாக்ஷி நடத்தி வந்தான்.

ஒரு சமயம் ராஜரீக வேட்டைக்காக போன போது அடர்ந்த கானகத்தின் உள்ளே மாட்டிக் கொண்டான். ஒரு சிங்கம் அவன் வழியை மறித்தது. மிகப் ப்ரயத்னத்துடன் அதனுடன் போராடினான். இறுதியில் தோல்வி கண்டு மடிந்தான். கோசல நாடு துக்கத்தில் மூழ்கியது. அப்போது யார் அரியணை ஏறுவது சுதர்சனனா சத்ருஜிதனா? என்னும் வாரிசு யுத்தம் தொடங்கியது. உண்மையில் சுதர்சனனே உரிமைப் பெற்றவன் ஆயினும் சத்ருஜித்தை ஆதரிக்க ஒரு கூட்டம் கிளம்பியது. ஒரு கூட்டம் வாரிசு அரசியலை ஊக்குவித்து இருவருக்கும் பிளவை ஏற்படுத்தியது. கோசலை முழுவதும் குழப்பம். சாதாரணமான குழப்பம் பெரும் போரில் முடிந்தது லீலாவதியின் தந்தை சத்ருஜித்திற்கு உதவ படையுடன் வர கலிங்க நாட்டிலிலிருந்து சுதர்சனனின் தாத்தா வீரசேனனும் தன் படையுடன் வர பெரும் யுத்தம் நடந்தது. இறுதியில் சத்ருஜித் ஜயமடைந்து வீரஸேனன் மாண்டான். சத்ருஜிதன் அரசனாக முடி சூடினான். நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்த அரசி மனோரமா தன் புத்ரனின் பாதுகாப்புக் கருதி இரவோடு இரவாக விதல்லன் என்னும் மந்த்ரியுடன் அரண்மனையை விட்டு வெளியேறினாள். கங்கைத் தாண்டி சித்ரகூடம் அருகில் உள்ள பரத்வாஜரின் ஆஸ்ரமத்தில் அடைக்கலம் வேண்டினாள். ரிஷியும் நடந்ததை அறிந்து சுதர்சனனை முனிகுமாரர்களுடன் தங்கவைத்து அவனுக்கு எந்த ஆபத்தும் எற்படாது என்று உறுதி கூறினார். அதற்கேற்றார் போல் அவனைத்தேடி சத்ருஜிதன் ஒரு நாள் வர தன் ப்ரம்மதேஜஸால் அவனையும், அவனது ஸேனையையும் த்வம்சம் செய்தார்.

அந்த ஆஸ்ரமத்தில் முனிகுமாரர்களோடு சாஸ்த்ரங்கள், யுத்த முறைகள் மற்றும் நீதி, தர்ம நூல்கள் இவைகளைக் கற்ற அவன் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தான். அவனுடைய நல்ல காலம் ஒரு நாள் த்யானத்தில் அம்பாளின் பீஜ மந்த்ரம் ஸ்புரிக்க அதை ஜபித்து வந்தான். அந்த ஜபத்தினால் மகிழ்ந்த தேவி அவனுக்கு சக்தி வாய்ந்த வில்லையும் அம்புகளையும், கவசத்தையும் தந்து அவன் வெற்றி பெற வாழ்த்தினாள். அவைகளைப் பெற்ற அவன் தன்னால் யுத்தத்தில் ஜயம் பெற முடியும், சக்தி தனக்குத் துணையிருப்பாள், மீண்டும் அரியணை ஏறுவேன் என்று மிகுந்த தன்னம்பிக்கையுடன் காலம் கடத்தினான். நடந்தது அரசு சதியானாலும் அவனுக்குக் கிடைத்தது தேவியின் அருள் என்று கூறி முடித்தார் பௌராணிகர்.

(தேவி பாகவதம்)

தமிழிலே நாம் சொல்லிவருகிறோம் - தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று. எல்லா நாட்டிலேயும் தென்னாட்டு மரபை, இந்த ஸம்ப்ரதாயத்தை ஏற்பாடு செய்தவர் ஆதிசங்கரர்.



ஸம்ஹாரம் என்று சொன்னால், அக்ஞானத்தை ஸம்ஹாரம் செய்பவர், சிவபெருமான், ஞானத்தை அளிப்பவர் சிவபெருமான்.

கீழ என்ன இருக்குன்னும் தெரியாது, இருக்கறது சிவலிங்கம்னும் தெரியாது, இவர் ஒக்காந்துண்ட்ருக்கறது பில்வம்-ங்கறதும் தெரியாது. பில்வத்துக்கும் சிவபெருமானுக்கும் இருக்கக்கூடிய தொடர்பும் தெரியாது.

அப்படிப்பட்ட ஒரு மனிதன், அந்த நேரத்துல, பார்வையை மறைக்கிறது என்பதற்காக கிளையை வெட்ட, அந்த பில்வம், சிவலிங்கத்தின்மீது பட்டு, அவருக்கு புண்யம் கிடைத்தது, என்று ஐதீஹம்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியருளிய உபகதைகள்



## ஆபாசங்களால் விளையும் அபாயம்

### 1. கேட்டதெல்லாம் தரும் கல்பதரு

தேசாந்தரமாய்த் திரிந்து கொண்டு சென்ற ஒருவன் ஒரு நாள் பெரிய மைதானத்தை அடைந்தான். அன்று அவன் நெடுந்தூரம் வெயிலில் அலைய வேண்டியதாயிற்று. மேலும் உடம்பெல்லாம் வியர்வை ஆறாய் ஓட அதிகம் களைப்படைந்தான். தூரத்தில் மரம் ஒன்று நிற்பதைக் கண்டு அதன் நிழலை அடைந்து சிறிது சிரமப் பரிகாரம் செய்வதற்காக உட்கார்ந்தான். ஆகா! இப்போது நல்ல மிருதுவான படுக்கை இருந்தால் எவ்வளவு சுகமாய் நான் தூங்குவேன்! என்று எண்ணினான். இந்த எண்ணம் உதித்து மறைவதற்குள்ளாக, ஒரு நல்ல படுக்கை பக்கத்தில் இருக்கக் கண்டான். அது எப்படி அங்கு வந்ததை என்பதை அறியாதவனாய்த் திகைத்தான். தான் கல்பதருவின் அடியில் இருக்கிறான் என்பதை அவன் எப்படி அறிவான்? அவன் அடைந்த அதிகக் களைப்பினால் அதனை விசாரித்து அறியாது அதன்மீது ஆனந்தமாய்ப் படுத்துக் கொண்டான். உடம்பெல்லாம் வலியிருக்கிறதே! கை கால்களைப் பிடிக்க இளமங்கையர் இப்போதிருந்தால் எவ்வளவு சுகமாகவிருக்கும்! என்று நினைத்துக் கொண்டிருக்கையில் இரு இளமங்கையர் தனது காலடியில் உட்கார்ந்து பிடித்துக் கொண்டு இருக்கவில்லை. ஆனந்தத்தில் இருப்பவனுக்கு அவர்கள் வந்த அதிசயம் தோன்றுமா? வலி சிறிது குறையவும் பசி உண்டாவதைக் கண்டான். 'என்ன! படுக்கை வேண்டுமென விரும்பினேன். படுக்கை வந்தது. கைகால்களைப் பிடித்து வலி நீங்க இளங்கன்னிகைகளை விரும்பினேன். அவர்களும் கூட இதோ வந்து பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவையெல்லாம் கிடைத்தபோது பசியாற்றப் பக்ஷணம் வராதா?' என்று அவன் யோசிக்கு முன் அறு சுவையோடு கூடிய அன்ன பதார்த்தங்கள் தனக்கு முன்னால் இருக்கக் கண்டான். என்ன மாயமாய் இது வந்தது என்பதைத் கருதாது தனது பசியாற அறுசுவை உண்டியை உண்டு, பிறகும் அப்படுக்கையின் மீது சார்ந்தான். அவனுக்கு வேண்டியது இனி ஒன்றுமில்லாமையால் போலும் அன்று தனக்குண்டாகிய அதிசயச் செயல்களைப் பற்றிச் சிந்தித்து மகிழ்ந்து இருக்கும் போது ஏதோ பயத்தினால், தற்செயலாய் ஒரு புலி இப்பொழுது வந்தால்.... என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தில் எழுந்த உடனேயே,

ஒரு பெரிய காட்டுப் புலி அவன் கழுத்தில் பாய்ந்து கடிந்து அவனைக் கொன்று விட்டது.

இம்மாதிரிதான் உலகவர் எல்லோரும் ஆசா பாசத்தினால் கெடுகின்றார்கள். நீயும் உன்னுடைய தியான காலத்தில் பொருளுக்கும், புகழுக்கும் பிறவற்றிற்கும் விரும்புவாயானால் அவற்றிற் சிலவற்றைப் பெறக்கூடும் ஏன்? கடவுள் விரும்பியதை விரும்பியபடி கொடுக்கும் கல்பதரு போன்றவர். எதை அடைய ஒருவன் விரும்புவானோ அத் தேவதரு அதனைக் கொடுக்கும். நீ விரும்பியதைப் பெற்று இன்புற்றிருக்கும் போது புலி வந்து விட்டால் என்ற மாதிரி, ஒரு பெரிய பயம் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும். அந்தப் புலி - நோய், பிணி, சாக்காடு, பொருள் புகழ் போன்ற குறைவுபடாய், புலியினால் வரும் துன்பத்திலும் பார்க்கப் பன்மடங்கு பெரும் பயங்கரமானதாய் இருக்கும்.

ஆகவே தியானம், பக்தி, ஜபம் ஒழுக்கம் முதலியவற்றால் ஒருவன் மனதினைத் தூய்மைப்படுத்திக் கொண்டு வரும்போது சிறிது சிறிதாக உலக ஆசாபாசங்களை எல்லாம் விட வேண்டும்.

## PÒ Í ÄÒ Í ® P Í øÁU Põ q ®

வழியோரத்தில் ஒரு சாது ஒருமுறை சமாதியில் ஆழ்ந்து கிடந்தார். ஒரு திருடன் அவ்வழியாய்ப் போய்க் கொண்டிருக்கும் போது அந்தச் சாதுவைக் கண்டான். 'ஓகோ! இங்கு படுத்துக் கிடப்பவனும் திருடன் போலக் காணப்படுகிறான். இன்று இரவு அவன் சில வீடுகளில் திருடி விட்டு வந்து, களைப்பினால் இங்கு தூங்குகின்றான் போலும். போலீசார் இவனைக் கைது செய்ய இதோ வந்து விடுவார்கள். காலந் தாழ்த்தாது நான் ஓடி மறைவேன்' என்று நினைத்துக் கொண்டு ஓடிப் போய் விட்டான்.

சில நேரத்துக்குள்ளாக ஒரு குடிகாரன் அங்கு வந்து சேர்ந்தான். சாதுவைப் பார்த்தான். 'ஓகோ! மூக்கு முட்டக் குடித்து விட்டு இப்பள்ளத்துள் விழுந்து கிடக்கின்றாயோ? என்றாலும் நானும் தான் குடித்திருக்கிறேன்; எனக்குச் சுயபுத்தி நிதானமாய் இருக்கிறது; நான் தள்ளாடி விழமாட்டேன்' என்று பிதற்றிக் கொண்டு போய் விட்டான்.

கடைசியாக ஒரு சாது அங்கு வந்து அவரைப் பார்த்தார். யாரோ ஒரு மகான் சமாதியில் ஆழ்ந்து கிடப்பதைக் கண்டு, அவர் பக்கத்தில் உட்கார்ந்து அவர் மலரடிகளை மிருதுவாக வருடத் தொடங்கினார். (நமது உலக வாசனைகளை அல்லவோ உண்மையான பய பக்தி தூய்மைகளைத் தெரிய விடாது மூடுகின்றன).

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

## க்ருஷ்ணன் தூது



யுதிஷ்டிரனிடம் விடை பெற்றுக் கொண்டு கண்ணபிரான் ஹஸ்த்னாபுரம் வந்தான்.

த்ருதராஷ்டிரன் பக்கம் இருந்த பீஷ்மர், த்ரோணர், க்ருபர் முதலானோர் துர்யோதனைத் தவிர தங்களை அலங்கரித்துக் கொண்டு க்ருஷ்ணனை வரவேற்க வந்தனர்.

வந்தபின் கண்ணபிரான் அரசனை கௌரவித்து விட்டு பீஷ்மரை இன் சொல்லால் வந்தனம் செய்தார். நண்பகலில் அவர் விதுரனை சந்தித்தபின் குந்தியைப் பார்க்க அவள் க்ருஹம் சென்றார். அவரைப் பார்த்தவுடன் குந்தி தன் புதல்வர்களை நினைத்து அவரை ஆலிங்கனம் செய்து கொண்டு அழுதாள். அவளை சமாதானம் செய்தபின் அவர் அவளை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு துர்யோதனனின் க்ருஹம் அடைந்தார்.

அவரைப் பார்த்தவுடன் துர்யோதனன் தன் பரிவாரங்களுடன் எழுந்து வணங்கினான். அவரை இரவு போஜனத்திற்கு அழைக்க அவர் அதை ஏற்கவில்லை.

க்ருஷ்ணர் : ராஜனே உணவு நண்பர்கள் இல்லத்திலும், ஆபத் காலத்திலும் தான் வெளியே உண்ணப்படுகிறது. நீ எமக்கு நண்பனுமில்லை, நாம் ஆபத்திலும் இல்லை. எதிரியின் அன்னம் வேண்டுவதில்லை, எதிரியும் உண்பிக்க வைப்பதில்லை. அரசே நீ பாண்டவர்களை வெறுக்கிறாய்.

அவர்களோ என் ப்ராணன். யார் அவர்களை வெறுக்கின்றனரோ என்னை வெறுக்கின்றனர், யார் அவர்களுடன் உள்ளரோ அவர்கள் என்னுடன் உள்ளனர். நானும் பாண்டவர்களும் ஐக்யமானோம் என்று அறிவாயாக. துஷ்டர்களின் அன்னம் ஏற்கத்தகுந்ததல்ல, விதுரனின் உணவே ஏற்கத்தகுந்தது. இப்படி சொல்லிவிட்டு அவர் விதுரனின் இல்லம் சென்று பசியாறினார். அதன்பின் அவரிடம் விதுரர் ''க்ருஷ்ணா உன்னுடைய இந்த வரவு பலிதமாகாது, மேலும் காது கேட்காதவன் முன்னால் ஒரு பாடகனின் பாட்டு எப்படியோ அப்படித்தான் உன் நல்லுரையும், வசவுரையும்'' என்றார்.

க்ருஷ்ணர் : துர்யோதனன் என் நல்ல எண்ணத்தைப் புரிந்து கொள்ளா விட்டாலும் பாதகமில்லை. மக்கள் மத்தியில் எனக்குப் பழி வராது. அந்த த்ருப்தி போதும். தர்மமான என் நல்லுரையை அவன் எற்காவிட்டால் விதியின் கோர விளையாட்டிற்கு இரையாவான். இப்படி அவர்கள் பேசி கொண்டிருந்தபோது இரவும் வந்தது. மறு நாள் காலை அவர் சூர்யனை வணங்கி ராஜ சபைக்கு எழுந்தருளினார்.

ஸ்ரீ க்ருஷ்ணர் சபையில் நுழைய த்ருதராஷ்டிரன், துரோணர், பீஷ்மர், க்ருபர் முதலானோரும் மற்ற ப்ரமுகர்களும் எழுந்து நின்று வந்தனம் செய்தனர். க்ருஷ்ணரும் தன் ஆசனத்தில் அமர மற்றவர்களும் அமர்ந்தனர். கர்ணனும், துர்யோதனனும் ஒரே ஆஸனத்தில் அமர்ந்தனர். க்ருஷ்ணர் அருகில் விதுரர் அமர அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்க அங்கே அமைதி நிலவியது. க்ருஷ்ணரும் பேசலுற்றார்.

(தொடரும்)

# மாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 13/2/2022 | ஞாயிறு | த்வாதசி |
| 14/2/2022 | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| 15/2/2022 | செவ்வாய் | பௌர்ணமி பூஜை |
| 17/2/2022 | வியாழன் | மாசி மகம் |
| 22/2/2022 | செவ்வாய் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 23/2/2022 | புதன் | அனுஷம் தேர் |
| 24/2/2022 | வியாழன் | அனுஷம் வேத பாராயணம் |
| 24/2/2022 | வியாழன் | கலவை ஸ்ரீபராத்பரகுரு ஆராதனை |
| 25/2/2022 | வெள்ளி | மூலம் தேர் |
| 26/2/2022 | சனி | மூலம் வேத பாராயணம் |
| 26/2/2022 | சனி | ஏகாதசி |
| 27/2/2022 | ஞாயிறு | துவாதசி, ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஜெயந்தி |
| 27/2/2022 | ஞாயிறு | உத்ராடம் தேர், உத்ராடம் வேத பாராயணம் |
| 28/2/2022 | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| 01/3/2022 | செவ்வாய் | அவிட்டம் வேதபாராயணம், அவிட்டம் தேர் |
| 01/3/2022 | செவ்வாய் | மஹா சிவராத்திரி |
| 3/3/2022 | வியாழன் | கலவை ஸ்ரீபரமேஷ்டி குரு ஆராதனை |
| 14/3/2022 | திங்கள் | ஏகாதசி, காரடையான் நோன்பு |
| 18/02/22, 25/02/22, 04/03/22 - 11/03/22 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ

**213. கேள்வி : பகவன் நாமாக்களை எப்போது ஜபிக்க வேண்டும்?**

**பதில் :** நித்ய கர்மாக்களுக்கு விரோதம் இல்லாத காலத்தில் ஜபிக்கலாம்.




**214. கேள்வி : இந்த நாமாமாக்களில் ஜபிப்பதில் நியமங்கள் உண்டா?**

**பதில் :** மந்த்ர ஜபத்திற்குத்தான் நியமமுண்டு. நாம ஜபத்திற்கு நியமம் கிடையாது. ஜாதி, பால், இடம் எந்த நியமமும் கிடையாது.

**215. கேள்வி : ப்ரும்மம் ரௌத்ர மணி என்றால் என்ன ?**

**பதில் :** தர்பையினால் போடப்பட்ட முடிச்சுக்கு ப்ரம்மம் என்று பெயர். ருத்ராக்ஷ மணியே ரௌத்ர மணி எனப்படும்.

**216. கேள்வி : பஞ்ச தசாக்ஷரீ என்றால் என்ன?**

**பதில் :** ''சிவராம கோவிந்த நாராயண மஹாதேவ'' இந்த பதினைந்து அக்ஷரம் கொண்டதை நாம ஜபத்தில் பஞ்சதசாக்ஷரீ என்பர்.

**217. கேள்வி : பஞ்ச மஹா யஞ்யம் என்றாலென்ன?**

**பதில் :** தேவ, பித்ரு, பூத, மனுஷ்ய, ப்ரம்ம யஞ்யங்கள் பஞ்ச மஹா யஞ்யம் எனப்படும்.

**218. கேள்வி : இவைகளுக்கு வேறு பெயர் உண்டா?**

**பதில் :** ஆஹுதம், ஹுதம், ப்ரஹுதம், ப்ராம்மஹுதம், ப்ராசிதம் என்றும் அழைக்கப்படும்.

**218. கேள்வி : இவைகளுக்கு வேறு பெயர் உண்டா?**

**பதில் :** ஆஹுதம், ஹுதம், ப்ரஹுதம், ப்ராம்மஹுதம், ப்ராசிதம் என்றும் அழைக்கப்படும்.

**219. கேள்வி : இவைகளின் விவரமென்ன?**

**பதில் :** வேத ஜபம், ஆஹுதம், ஹோமம், ஹுதம், பூதபலி, ப்ரஹுதம், ப்ராம்மண பூஜை, ப்ராம்ம ஹுதம் பித்ரு பூஜை ப்ராசிதம்.

**220. கேள்வி : வீட்டில் உணவு அளிப்பதன் நியமமென்ன?**

**பதில் :** முதலில் அதிதிக்கு போஜனம் அளிக்க வேண்டும். அதன் பின் கர்பிணீ, பாலர்கள், வயதானவர்கள், தீனர்கள், பிணியாளர்கள் இவர்களுக்கு உணவு அளித்த பின் தான் மற்றவர்கள் உண்ண வேண்டும்.

**221. கேள்வி : ஸுவாஸினிகள் என்பவர் யார்?**

**பதில் :** திருமணமான பெண்கள் ஸுவாஸினிகள் ஆவர்.

**222. கேள்வி : அப்யாகதன் அதிதி என்ன வேறுபாடு ?**

**பதில் :** முன்னமே தெரிந்தவன் அப்யாகதன். தெரியாதவன் அதிதி.

**223. கேள்வி : உணவு உண்பதற்கு நியமங்கள் உண்டா?**

**பதில் :** ஸ்னானம் செய்யாமல், ஜபம் செய்யாமல், ஹோமம் செய்யாமல் பிறருக்குக் கொடாமல் உண்பவன் விஷத்தைப் புஜிக்கிறான். இரண்டு கால்களில் ஈரம் காயவதற்கு முன் உண்ண வேண்டும். ஆசமனம், செய்த பிறகே உண்ண வேண்டும். திக்குகளின் சந்திகளை நோக்கி அமர்ந்து உண்ணக் கூடாது. நின்று கொண்டு உண்ணக் கூடாது. முன்பு உண்ட உணவு ஜீர்ணமாகமல் இருக்கையில் உண்ணக் கூடாது. அதிகப் பசியுள்ளவனாய் உண்ணக்கூடாது. எவ்வளவு விழுங்க முடியுமோ அவ்வளவு அன்னத்தை எடுத்து கீழே சிதறாமல் உண்ண வேண்டும். சப்தத்துடன் உண்ணக் கூடாது. பேசிக் கொண்டு உண்ணக் கூடாது. பூமியில் கையை வைத்து உண்ணக் கூடாது. இடக் கையில் வைத்துக் கொண்டும் மடிமீது வைத்துக் கொண்டும் உண்ணக் கூடாது. நெய்யில்லாமல் உண்ணக் கூடாது. பேசிக் கொண்டும் பாடிக்கொண்டும் உண்ணக் கூடாது. இது நன்றாக இல்லை என்று நிந்தித்துக் கொண்டும் உண்ணக் கூடாது.

# வேதோ நித்யம் அதீயதாம்

## உபநயனமான அந்தண மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்
அத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா"

என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தன்னுடைய விவேக சூடாமணி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் இதே கருத்தை கூறுகிறார். அந்தண குலத்தில் பிறந்த அனைவரும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்த நியதியை பல சிரமங்கள் வந்த பொழுதும் நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால் தற்பொழுது உள்ள சமுதாய சூழ்நிலைகளால் இந்த அவிச்சின்னமான வேத பரம்பரையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்து மீண்டும் இந்த வேத பரம்பரையானது தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பல ஊர்களில் பல வேத பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பள்ளி படிப்பும் மிக முக்கியமான ஒன்றாக மாறிவிட்டதால் வேதாத்யயனம் செய்து கொண்டே பள்ளியிலும் படித்து தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பும் ஸ்ரீ சங்கர மடம் மூலம் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்பொழுது காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ தண்டபாணி ஓரியண்டல் பள்ளியில் பள்ளி படிப்பும், அதோடு சேர்ந்து வேதம், சம்ஸ்க்ருதம், மற்றும் நமது சம்ப்ரதாய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களும், நீதி நூற்களும் கற்பிக்கப்படும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரு வழிகளிலும் பயிற்சி தரப்படும். கல்வி, உணவு, தங்குமிடம் எதற்கும் கட்டணம் கிடையாது. 10 வயது முதல் 13 வயது வரையுள்ள உபநயனமான மாணவர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். பள்ளி படிப்பு முடிந்ததும் கல்லூரி படிப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

பெற்றோர்கள் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்கும் நமது சமுதாயத்திற்கும் வளமான எதிர்காலம் அமைய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

**R.வெங்கடசுப்ரமண்யன் :8903015221**
**V.P.ஸ்ரீனிவாசன் : 9445104873**
**G.பிரசாந்த் : 8056375421**
**K.ஸ்ரீராம் : 9894775434**